உ

புங்குடுதீவு அருள்மிகு

கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய



# தேரோட்டம்

27-7-1979.

உ

புங்குடுதீவு அருள்மிகு
கண்ணகை அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய

# சித்திரத் தேர் சிறப்பு மலர்

## 27 - 7 - 1979

வெளியீடு :
ஷை ஆலய தேர்த் திருப்பணிச் சபையார்

தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர்

## திரு. அ. க. கண்ணையா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தமிழரின் வாழ்க்கையில் தோன்றியது சமயம். அதனால் அன்றாட வாழ்க்கையில் வழிபாட்டுமுறை அமைந்திருக்கிறது. வழிபாடு சமுதாய உறவைநோக்கி நகர்ந்தபோது திருவிழாக்கொள்கை தோன்றியது. சமய நெறியில் திருவிழா இன்றியமையாதது. இதில் தேர்த்திருவிழா மிக முக்கிய மானது.

இதனை உணர்ந்து கண்ணகை என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பிகைக்கு புதிய சித்திரத் தேர் உருவாக்க தேர்த்திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டது. அம்பிகையின் அருளால் சபை எடுத்த முயற்சியே இன்று நடைபெறும் வெள்ளோட்ட விழா.

சகல நிகழ்ச்சிகளும் தடையின்றி நிறைவுபெற ஒத்துழைத்த பஞ்சாயத்துச்சபையார், பரிபாலன சபையார், தேர்த்திருப்பணிச் சபையார் குறிப்பாக தம்பிகள் மு. கனகசபாபதி, த. கிருஷ்ணசாமி மற்றும் பண உதவி புரிந்த கொடைவள்ளல்களுக்கும் தன் குடும்ப உபயமாக தேர் முட்டியை நிறைவுசெய்து உதவிய திரு. கணபதிப்பிள்ளை தியாகராசாவையும் பாராட்டுகிறேன்.

எல்லாம்வல்ல இறைவி மேலும் பல பணிகள் புரிய எம்மை ஆற்றுப் படுத்துவாளாக.

சித்திரத் தேரை உருவாக்கிய பிரதான ஸ்தபதியார்
"சிற்பரத வித்தகன்"

## திரு. ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

உலகம் என்னதான் விஞ்ஞானத்தில் முன்னேற்றம் கண்டாலும், எல்லாவற்றுக்கும் மேலான ஓர் சக்தி சகலதையும் ஆட்டிப்படைக்கின்றது. இதே சக்தி புங்குடு தீவில் கண்ணகை எனத் தோன்றி இன்று ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியாக வீற்றிருந்து தன்னை நம்பினோர்க்கு அருள்பாலிக்கின்றாள்.

ஈழத்தில் ஓர் தனித்துவமாக தமிழகத்துக் கோயில்களுடன் ஒப்பிடக்கூடியதாக விளங்கும் ஓர் ஆலயம் இதுவென்றால் மிகையாகாது. இங்கே நிகழும் எந்தவொரு திருப்பணியும் தனித்துவமுடையனவாய் விளங்குகின்றன. அண்மையில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் அதனோடு தொடர்புபட்ட பல விடயங்களை நேரில் பார்த்தேன். இப்பெரும் கைங்கரியத்தை நடத்திமுடிப்பது சாதாரணமான செயலல்ல. இது மனிதர்களின் முயற்சியுமல்ல, தெய்வத்தின் அருட்கொடை.

பல திருப்பணிகள் ஒரே நேரத்தில் நடந்துகொண்டிருக்கையில்தான் தேர்த் திருப்பணிச் சபையார் என்னை அழைத்து தேர் வேலையை ஒப்படைத்தனர். பல பணிகளுடன் இதுவும் சேர்ந்து ஆரம்பிக்கிறபடியால் தேர் நிறைவுபெற பல ஆண்டுகள் செல்லலாமென யான் எண்ணிய எண்ணத்துக்குமாறாக ஒரு ஆண்டுக்குள்ளாகவே நிறைவுபெற்று இன்று வெள்ளோட்டத்திற்கு வருகிறது.

தனது தேவைகளுக்குரிய பொருட்களை கடல்மூலம் தானாகவேவந்து கோயிலடியில் சேர்ப்பிக்கும் அருள்மிகு அன்னை, தேர் வேலையையும் மனித உருவில் வந்து நிறைவு செய்வித்தாளோ என்று எண்ணுமளவிற்கு செயல்பட்ட பஞ்சாயத்து, பரிபாலன, தேர்த் திருப்பணிச் சபையார்கள் குறிப்பாக பெரியார் திரு. சி. முத்துக்குமாரு அவர்களையும் அவர் மைந்தன் திரு. மு. கனகசபாபதி அவர்களையும் பாராட்டிப் போற்றுகிறேன். தேரை பாதுகாக்கவேண்டுமென்ற உணர்வை அன்பர் திரு. க. தியாகராசாவின் உள்ளத்தில் அம்பிகை ஏற்படுத்தியபடியால்தான் அவர் தனது குடும்ப உபயமாக உதவியிருக்கிறார். இவ்வுதவி கிடைத்திராவிடின் தேர் வேலை இன்னுமோர் ஆண்டு பின் சென்றிருக்கும். பெரியாரின் பெரும்பணி இன்னும் வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

அன்பர் திரு. க. தியாகராசா தேர்முட்டியை நிறைவுசெய்துதருகிறேன் என்று முன்வந்த நிகழ்ச்சியையும், பெரியார் திரு. சி. முத்துக்குமாரு அவர்கள் கடும் சுகயீனத்துடன் வந்து தேர்முட்டிக்கு அத்திவாரக்கல் நாட்டியபின் இளைஞர்போன்று இன்று வரை திருப்பணிகள் சிறக்க உழைத்துவரும் தன்மையையும் எண்ணி வியக்கின்றேன். அந்தநிலை அம்பாளின் அருளேயாகும்.

புதிய சித்திரத் தேரை இழுப்பதற்குரிய தேர் வடத்தை கடலிலே கிடைக்கச் செய்த அற்புத நிகழ்ச்சிபோன்று, தனது திருப்பணிகளுக்கு மனம் கோணாது வாரி வழங்கும் வர்த்தகப் பெருமக்களையும் வளர்த்திருக்கிறாள். அகிலலோகநாயகியான அன்னை இராஜ ராஜேஸ்வரியின் நல்ல பணிகள் பலவற்றைச் செய்து இராஜகோபுரத்தையும், சித்திரத் தேர்த் திருப்பணியையும் நிறைவுசெய்திருக்கும் அம்பிகையின் அடியார்கள் மேலும் பல திருப்பணிகள் செய்ய நீண்ட ஆயுளையும், சுகத்தையும் அம்பாள் வழங்க பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

உ



பிரபல வர்த்தகர்

## திரு. மு. இராதாகிருஷ்ணன் அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

சைவம் வளர்த்த சிவநெறிச் செல்வர்களைத் தன்னகத்தே கொண்டது புங்குடுதீவு எனும் பொன்கொடுதீவு. நாடு வாழ வளம்பெற அருள் மிகு கண்ணகை என வழங்கும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலயம் சிறப்புறவேண்டுமென்று தனது உள்ளத்தில் உருவாகிய எண்ணத்தை, 1964ம் ஆண்டுக்குமுன் லட்ச ரூபாவுக்குமேல் செலவுசெய்து, அம்பாள் கோவிலை வானளாவிநிற்கும் தூபிகளுடன் வண்ணமுற அமைத்தவர் எனது தந்தையார் அமரர் திரு. மு. முத்தையாபிள்ளை என்றால் மிகையாகாது. பல்லாண்டுகளாக அம்மாள் ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டு அரும்பெரும் சாதனைகள் புரிந்த தந்தையாரின் மனதில் இருந்த சில பணிகள் தற்பொழுது நிறைவுபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அண்மையில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின்போது தந்தையின் பெயரால் எமது குடும்பத்தாருக்கு அளித்த பெருமையினை நன்றிப்பெருக்குடன் பாராட்டுமதேவேளையில் அன்னையின் அருளை வேண்டித் துதிக்கின்றேன்.

எமது தந்தைவழி நின்று இன்று புதிய சித்திரத் தேரை உருவாக்கி அரும்பணியாற்றும் சகலருக்கும் அன்னையின் அருள் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

மகோற்சவசிவாசாரியார்

கிரியாகலாபமணி, சிவாகமஞானசாகரம், குருமணி,

சைவபூஷணம், கலாநிதி

# சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

அரிதிலும் அரிதாகிய மானிடப்பிறவியை ஆண்டவன் நமக்குத் தந்தது இறைவனை வணங்கி வாழ்த்திப் பெருநிலை பெறுவதற்கேயாம். ஆலயப் பணிகள் அனைத்துமே அளவிடற்கரிய புண்ணியத்தை தருவனவாயினும் அன்னைக்குச் சித்திரத்தேர் நிர்மாணிக்கும் அரும்பணியே அனைத்துக்கும் மேலானது என்பதைப் புங்குடுதீவு கண்ணகையம்மன் கோவில் எனவழைக்கப்படும் அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பிகையின் அடியார்கள் நன்குணர்ந்து நற்பணியாற்றியுள்ளதை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது. அகில சராசரங்கள் அனைத்துமே ஆண்டவனுக்குத் தேர் தான். எண்பத்துநான்குலவும் யோனி பேதங்கள் அனைத்தினுக்கும் உட்பொருளாக நின்றியக்குவிக்கும் இறைக்கு யாவும் தேர் தான் என்பதில் என்ன ஆச்சரியம்?

அண்டங்கள் யாவும் மேலேழுலகும் கீழேழுலகுமாகப் பதினான்கு பகுதிகளாகின்றன. இவற்றின் வடிவாக விளங்கும் தேரினது மந்திர சிம்மாசனத்தில், கண்ணிற் கருமணி போன்று, மனமணியிலிங்கம் போன்று, உயிர்க்குயிர் போன்று, ஆண்டவன் எழுந்தருளி உலகிற்கிதனை உணர்த்துவதற்காக வீதிவலம் வந்தருளுகின்றான். அன்னையாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரிக்குக் கடந்த ஆண்டு சித்திரத்தேர்ப் பணியாரம்பித்து யாரும் எதிர்பாராதளவிற்கு சாஸ்திரோகிதமாகவும் சர்வலக்ஷணங்களுடனும் அமைந்திருப்பது மிகவும் அபூர்வமானதேயாம்.

இப்பணியைத் திறம்படசெய்யும் தேர்த் திருப்பணிச் சபையினரும் அதன் முதுகெலும்பு போன்றிலங்கும் திரு. சி. முத்துக்குமாரு அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். மேலும் இவர்கள் மேற்கொண்ட முதலாவது நற்காரியம், தற்போது நமது நாட்டில் பிரபலமான பல தலங்களில் ரதங்களை நிர்மாணித்துப் பெரும் புகழ் பூண்ட திரு. ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்களைச் சிற்பாசாரியராக நியமித்ததேயாகும். அவரது குழுவினரின் சிறந்த கலை நுணுக்கம் நிறைந்த சித்திரவேலைகளை இத்தேரைக் காணவரும் அனைவரும் நன்கு தெரிந்து கொள்ளலாம். அனைவருக்கும் அன்னையின் கிருபையால் சகல செல்வங்களும் பெற்றுப் பெருவாழ்வு பெறவேண்டுமெனவும் வெள்ளோட்டப் பெருவிழா சிறக்கவும் நல்லாசி கூறுவோமாக.

சுபம்.

உ

அம்பிகை துணை

ஆலய பிரதம குரு

## சிவாசார்யமணி சிவஸ்ரீ ப. கணேசராஜக் குருக்கள்

அவர்களின்

# ஆசி உரை

இவ்வுலகில் நாம் அரிதான மானிடப்பிறவியை பெற்றுள்ளோம். அவற்ருேடமையாது பகுத்தறிவைத் தூண்டும் கல்வி – கேள்வி - அனுபவம் என்னுமிவற்றையும் பெற்றுவருகிருேம். எனவே நமக்கு முதன்மையான இரு கடமைகளிருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். அவற்றுள் ஒன்று ஆன்மார்த்தமானது. அது நமது அல்லற் பிறவியை அறுத்து ஆன்ம ஈடேற்றத்தை பெறதற்கு வேண்டிய சைவ சமய ஒழுக்க நெறியில் நிற்றலாகும். மற்றது உலகார்த்தமானது. அது உலகம் உவப்பனவற்றை செய்து நல்வாழ்வை மேற்கொள்ளுதலாகும். இந்த இரண்டு உயரிய நோக்கங்களும் நமது நாளாந்த செயலாற்றல்களெல்லாவற்றிலும் நன்கு பர்ணமித்து செய்வதே அறிவுடைமையாகும். இதற்கு இறைவழிபாடும் சமயப்பற்றும் இன்றியமையாதவை என்பதை நன்கு அறிந்த இவ்வூர் மக்கள் எந்த எந்த அடிப்படையில் ஆண்டவருக்கு தொண்டு செய்ய முடியுமோ அந்தவழியில் அவர்களுக்கு உரிய தகுதிகளோடு ஆண்டவனே வழிபடுவதில் சிறந்தவர்கள் என்பது நாடு அறிந்த உண்மை. இதன்படி இவ்வாலயத்தில் குறிப்பிட்ட சில நாட்களுக்குள் 33 குண்டங்களோடு கூடிய மகாயாகம் அமைத்து பல லட்சருபாய் செலவு செய்து மகா கும்பாபிஷேகம் செய்து முடித்து, உடனே அம்பாளின் திருவருளினுல் மஹோற்சவம் நடைபெற்று, புதிய சித்திரத்தேரில் அம்பாள் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சியை காணவேண்டும் என்ற ஆவலினுல் இரவு பகல் பாராது உடல் உள்ளம் பொருள் என்பவற்றை எல்லாம் அம்பிகைக்கே அர்பணித்து இன்று தேர் திருவிழாக் காண ஆசைப்பட்டு நிற்கும் பல லட்சக்கணக்கான அடியார்களுக்கு அம்பிகை அருள் கிடைக்க எல்லாம்வல்ல இறைவியை பிரார்த்திப்பதோடு இத்தேர்த் திருப்பணி கும்பாபிஷேகம் முதலியவற்றுக்கு வாரி வழங்கிய வணிகப் பெருமக்களும் இத்தேர் ஒரு வருடத்துக்குள் சிறப்பாய் அமைய இத்தேர் பவனிவர தன்னுலான சகல முயற்சிகளையும் நிமிடம் தவருது கண்காணித்து ஆவனசெய்துகொண்டு இருக்கும் திருப்பணிச் சபைப் பொறுப்பாளர் உயர்திரு. சி. முத்துக்குமாரு குடும்பத்தவர்களுக்கும் இத்தேர் சிறந்தது என உலகத்தவர் போற்றவேண்டும் என்னும் கருத்துடன் பயன் கருதாது இரவுபகல் பாராது சித்திரத்தேரை உருவாக்கிவரும் ''சிற்பகலாரத்தினம்'' ஆறுமுகம் – ஜீவரட்ணம் அவர்கட்கும், அவர் உதவியாளர்களுக்கும் இத் தேர்ப் பவனியை மனக் கண்முன் தினமும் தியானித்துக்கொண்டு செயலாற்றும் கோவில் நிர்வாகிகளுக்கும் அம்பாளின் பூரணகடாட்சத்துடன் ஆசிவழங்குகிருேம்.

நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே



இந்திய - தமிழ்நாடு

மாமல்லபுரம் சிற்பக்கூட அதிபர்

" சிற்பராஜ விற்பன சிகாமணி "

## ஸ்தபதி
## திரு. வை. கணபதி

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

பொன்கைநகர் கன்னகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலய அமைப்புக்களைப் பார்வையிடவும், தேர் முட்டிக்கு நிலையம் குறிப்பதற்கும் சிலமாதங்களுக்கு முன் என்னை அழைத்திருந்தார்கள். ஈஸ்வரியின் அருள்பிரவாகம் அன்றுமுதல் என்றும் அங்கு நிலைபெற்றிருப்பதையறிந்து உளம் மகிழ்ந்தேன். ஆலய அமைப்பும் இராசகோபுரமும் வீதிகளும் சிறிதும் பிசகின்றி சாஸ்திரப் பிரமாணத்துக்கமைவாக இருக்கின்றன. சித்திரத் தேர் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பண்டிகைவரை முடிந்திருந்த அதன் அமைப்பைப் பார்த்த மாத்திரத்தே அற்புதமான அதன் முழுத் தோற்றம் கண்முன் நின்றது. இன்று தேர் வெள்ளோட்டச் செய்தியறிந்து மனம் மகிழ்கின்றது.

இந்த அற்புதமான தேரை உருவாக்குபவர் யார் என அறிய ஆவல் கொண்ட போது சிலநாட்களுக்கு முந்திய சந்திப்பை அன்பர்கள் நினைவூட்டினார்கள்,

தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வர மகாமண்டப அமைப்புப் பற்றி ஆலோசிப்பதற்காகத் திருப்பணிச் சபையினர் என்னை அங்கு அழைத்துச் சென்றனர். அங்கும் ஒரே நேரத்தில் ஐந்து தேர்கள் செய்யப்படுவதைக் கண்டேன். அவற்றின் சாஸ்திர சுத்தமான அமைப்பைப் பார்த்து வியந்தேன், தேர் செய்யும் சிற்பியை அறிய விரும்பியபோது அங்கு நின்ற புன்சிரிப்புத் தவழும், இளம்வயதினரான ஜீவரட்ணம் ஆச்சாரி அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். கலையின் ஒளி அவர் முகத்தில் திகழ்வதைக் கண்டேன். உத்தமக் கலைஞனுக்குரிய அடக்கமும், பண்பும் அவரிடம் குடிகொண்டிருந்தன. ஐம்பதுக்கு மேற்பட்ட தேர்களைச் செய்து ஈழத்துப் பெரியார்களின் பாராட்டைப் பெற்ற அவரை வாயார மனதார வாழ்த்தி ஆசி வழங்கினேன். இன்று அவர் ''சிற்பராஜசிகாமணி'' எனும் பட்டமளித்துப் பாராட்டப்படுவதையறிந்து மகிழ்கின்றேன்.

அவர் தந்தையார் பெரிய மேதாவி. தமிழகம் அறிந்த தலைசிறந்த சிற்பக் கலைஞர். தந்தைக்கேற்ற தனையர்களாக திரு. ஜீவரட்ணம் அவர்களும் அவர் தம்பிமாரும் விளங்குவதைக் கண்டு மனம் பூரிக்கிறேன்.

அவர்கள் எல்லா நலமும் பெற்றுக் கலைவாணியின் நல்லருளால் உலகம் போற்றும் உத்தம விற்பனச் சிற்பிகளாய் விளங்குவார்களாக.

உ

# தாயைச் சரணடைவோம்

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி



"அருளது சக்தியாகும் அரன்தனக்
கருணை யின்றி தெருள் சிவமில்லை
அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"

இவ்வுலகில் பெண் வடிவில் பெருமானைக் காணும் மதம் இந்து மதமே. பெண்களையே தெய்வங்களாக வைத்துப் பூசித்துப் போற்றும் சிறப்பும் இம் மதத்திலுண்டு. சுமங்கலிப் பிரார்த்தனையென்று இவ்வழிபாட்டைச் சொல்வார்கள். இவ்வாறு பூசிப்பதனுல் சர்வ மங்கலங்களும் ஏற்பட்டுத் தோசங்கள் அகற்றப்படுகிறது. அன்னை பராசக்தியின் அருளைப் பெற்றவர்களுக்கு இவ்வுலகில் ஒரு குறையுமில்லை.
இவ்வுண்மையைக் குறித்தே

"இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல்
உனக்கென்குறையே"

என்று பாடுகிருர் அபிராமிபட்டர்.

இவ்வாறு ஒரு குறையுமின்றி அம்பிகையின் அருள்பெற்று வாழ்பவர்கள் புங்குடு தீவுவாழ் சைவமக்கள். இவர்களில் பலர் வர்த்தகப்பெருமக்களே. அன்னை கண்ணகித் தாயை அல்லும் பகலும் வழிபடும் நோன்புடையவர்கள் இவ்வூர் மக்கள். இவ்வாலயத்தின் ஒவ்வொரு திருப்பணிகளையும் அவர்கள் மனமுவந்து செய்து முடிக்கின்றனர். சமீபத்திலே நடைபெற்ற மகா கும்பாபிஷேகவிழா இவ்வூர் மக்களின் பக்தி சிரத்தைக்கு மிக எடுத்துக்காட்டாக விளங்கியது.

இத்தொடர்பு வாய்ந்த திருப்பணியிலே இன்று நிறைவுறும் தேர்த்திருப்பணி மிக முக்கியம் வாய்ந்ததாகும். அன்பர்கள் சிலர் அல்லும் பகலும் அயராது உழைத்து இப்பணியை நிறைவேற்றியுள்ளனர். சிற்பக்கலைஞர் ஜீவரட்ணமும் அவர் குழுவினரும் புதிய சித்திரத்தேரை அம்பாளுக்கு அழகுற அமைத்துக் கொடுத்தனர். கலை நலம் பொலிந்த அற்புதத் தோற்றத்துடன் இத் தேர் மிளிர்வது கண் கொள்ளாக் காட்சியாகும்.

கணேச ரூபமாகவும், ஒன்பது கிரக ரூபமாகவும், ஆறு யோனிகள் ரூபமாகவும் பன்னிரண்டு ராசிகள் ரூபமாகவும் மந்திர வடிவாகவும் ஐம்பது மாத்ருகா அட்சரவடிவாகவும் ஜாலந்திரம் முதலிய பீடவடிவாகவும் உள்ள தேவியை அதே வடிவுபொலிய விளங்கும் சித்திரத் தேரில் வைத்துத் தரிசிப்பது ஆண்டுக்கொரு முறை நமக்குக் கிடைக்கும் கண்கொள்ளாக் காட்சியாகும். சூரிய சந்திர மண்டலங்களில் விளங்குபவளாகவும் இரு ஸ்தனங்களும் ஒருமுகமும் கீழ்ப்பாகமும் உடையவளாகவும் தூலசூக்கும், காரணமாகிய மூன்று கோசங்களில் உறைபவளாகவும் காம கலா வடிவினளாகவும் நினைத்த உரு எடுப்பவளாகவும் விளங்குகின்ற பரதேவதையைத் தியானித்து மக்கள் எண்ணிய எண்ணியாங்கு வரம்பெற யாசித்து நிற்கும் திருநாள் இவ்விழா நாளாகும். அன்பெனும் கயிற்றால் அன்னையை மனோரதத்தில் ஏற்றி இழுக்கும் பாவனையில் எல்லோரும் வடம் தொட்டு இழுத்து மகிழ்வடையும் நாள் இந்நாள்.

சீரோடு கோயிலில் தேர் விழா என்றால் அவ்
வூரோடு நாட்டினில் உள்ளவர்கள் வந்துகண்டு
தாரோடு சந்தனமும் தாமணிந்தே இன்புறுவார்
எல்லார்க்கும் ஈசன் பொதுவென்னும் எண்ணத்தை
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நாட்டிவைக்கும் தனிவிழா
அன்னை அருளால் அனைவருமே நலமடைய
மன்னுபெரும் பக்தர்களின் மனக்குறைவு நீங்கியிட
ஏற்றமுறு தேரில் எம்மன்னை காட்சிதர
நாற்ற மலர்ப்பதத்தே நாமெல்லா மொன்றிவிட
வாய்த்த பிறப்பை வழுத்துவோம் வையகத்தில்.
சீர்த்தியுற்று வாழ்க திருவருள்.

எண்ணெய் இல்லாது தீபம் எரியாது. அதுபோன்று கடவுள் இல்லாது மனிதன் உயிர் வாழ முடியாது. கடவுளின் சங்கற்பம் அல்லது இச்சையே இயற்கை நியதிகளாக வடிவெடுக்கிறது. பூரணமாகத் தெய்வத்தன்மை அடைவதே மனித இலட்சியம். ஆகவே உன்மனதை இறைவனிடம் திருப்பு, அப்பொழுது உனது சுகம் துக்கம் ஒழியும். பிறப்பு இறப்பு நீங்கும். முத்தியும் கிட்டும்.

— சுவாமி சிவானந்தர்

உ

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"



மில்க்வைற் தொழிலக அதிபரும்
சிவநெறிப்புரவலருமாகிய

# உயர்திரு க. கனகராசா J. P. அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் யான் அகமகிழ்வெய்துகின்றேன்.

பண்டைக்காலம் முதல் ஈழத்தில் கண்ணகி அம்மனுக்கு வழிபாடு நடைபெற்று வருகின்றது. புங்குடுதீவிலும் கண்ணகை அம்மன் வழிபாடு தொன்றுதொட்டே நடாத்தப்பட்டு வருகிறது.

அருள்மிகு கண்ணகி அம்மனுக்கு இன்று அடியார்கள் சித்திரத் தேர் ஒன்றை உருவாக்கியிருக்கின்றனர். அம்பாள் சித்திரத் தேரில் பவனிவரும் இத்தினத்தில் அடியார்கள் அனைவருக்கும் அம்பிகையின் அருள்கிடைக்கப் பிரார்த்தித்துக்கொண்டு மலர் சிறப்புற எமது நல் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

★

### யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைச் செயலாளரும்
### நோர்தேண் இன்டஸ்ரீஸ் அதிபருமான
## உயர்திரு த. சண்முகலிங்கம் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு அருள் விளங்கு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத் தேர்த் திரு விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் யான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

அம்மையார் அருளால் இம்மையில் செம்மையான வாழ்வினைப் பெற்றுள்ள செல்வச் சீமான்களின் பெருந்தன்மையினாலும் பெருநிதியினாலும் அம்பாளின் ஆலயம் இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

தேர்த் திருப்பணிச்சபையார் அம்பாளுக்கு அழகுமிகு இரதம் ஒன்றினை உருவாக்கி யுள்ளனர். இராஜகோபுரத்துடன் கூடிய அழகிய ஆலயத்தில் எழில்மிகு இரதத்தில் பவனிவரும் அம்பாள் அடியார்களுக்கு அல்லல்களைந்து ஆனந்தம் அளிக்கும் நல்வாழ்வை நல்குவாள் எனப் பிரார்த்தித்துக்கொண்டு மலர் சிறப்புற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உ

ஓம் சிவசக்தி

# சுகமெங்களுக்கினிதருள்வாய்

பொன்பெருகு சைவநெறிப் புண்ணியம் பொலிமறை
        பூத்தவா கமங்கள் பொலிய
புராணவிதி காசங்கள் தருநீதி நிறை பொலியப்
        பொழிந்ததிரு முறைகள் பொலிய
அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையெனும்
        ஐந்துமுயர் சால்புபொங்கும்
ஆனந்த சமுதாய ஞானஒளி பொலியமெய்
        யடியாரும் தமிழும் பொலிய
முன்புதொடு வினைநீக்கி முத்தியுறு பணியாக்கி
        முந்துமன் னுயிர்கள் பொலிய
முத்துநவ ரத்தின மிசைத்தமணித் தேரேறி
        முதுவீதி வருமன்னையே
இன்பமிகு நின்பாத பங்கய மலர்ந்தசுக
        மெங்களுக் கினிதருள்வாய்
எழில்வாரிப் புங்கநகர் வந்த கண்ணகிச்செல்வி
        இராஜ ராஜேஸ்வரியே.

அளவெட்டி
17-7-79.

அருட்கவி சி. விநாசித்தம்பி



புங்குடுதீவு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய
பஞ்சாயத்துசபை உறுப்பினர்

# திரு. என். கே. மயில்வாகனம் அவர்கள்

வழங்கிய

# பிரார்த்தனை உரை

''பெற்றதாயும் பிறந்த பொன்நாடும் நற்றவானிலும் நனிசிறந்தனவே'' என்ற ஆன்றோர்வாக்கின் உண்மையை உணர்ந்தபொழுது அன்னை உருவில் எங்கள் குலதெய்வமாகிய அம்பிகையைக் கண்டேன்.

இளமைப் பருவம் முதல் இறைவியின் திருவடியை மனதில் பக்தியோடு பதித்து வைக்கும் அன்னையின் பரிவை, மெய்யறிவாலுணர்ந்து அன்பு செலுத்தி, இறைவியிடத்து நம்மை ஒப்படைத்து நிற்போமாயின் அன்னையின் அருள் நம்மைமேவி ஆட்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அப்பொழுது இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் தெய்வீக வாழ்வு வாழலாம், இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் இறைவியின் திருவடிக்கீழ் வாழலாம். இறப்புக்கு அஞ்சவேண்டியதில்லை.

நினைத்த வரம் அருளும் கண்ணகை என விளங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் ஆலயத் திருப்பணி பல நிறைவுபெற்று இன்று சித்திரத் தேரோட்டமும் நிகழுகின்றது. இத்திருப்பணிகளுக்கு அம்பிகையின் அடியார்களோடு என்னுலான பங்கையும் செலுத்தியுள்ளேன். மேலும் பல பணிகளைப்புரிய அம்பிகையின் அருளை வேண்டிநிற்குமதேவேளையில் நல்ல பல பணிகளைப் புரியும் பஞ்சாயத்துச் சபையார்க்கும், பரிபாலன சபையார்க்கும், தேர்த்திருப்பணிச் சபையார்க்கும் மற்றும் அடியார்களுக்கும் அம்பிகையின் அருள் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

தேர்த்திருப்பணிப் பணியமைப்பாளர்

## திரு. சி. முத்துக்குமாரு அவர்கள்

வழங்கிய

# பிரார்த்தனை உரை



பொன்கைநகர் கண்ணகை அம்மன் என விளங்கி அடியார்களுக்கு அருள்மழை பொழியும் அன்னை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் அற்புதங்கள் நிறைந்த வரலாற்று புகழ்மிக்கதோர் ஆலயமாகும். நினைத்த வரம் அருளும் அம்பிகை ஆலயம் நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையுடையது. அதன் புதுமை நிகழ்ச்சிகளில் ஒன்று எமது காலத்தில் (1971ம் ஆண்டில்) நடைபெற்றது. அதுவே புதிய சித்திரத்தேர் ஒன்றை உருவாக்க எம்மைத் தூண்டியது.

பல ஆண்டுகளாக இவ்வாலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்று வருகிறது. 1970-ம் ஆண்டுத் தேர்த்திருவிழாவில் தேர்வடம் அறுந்து அடியார்கள் மனதில் வேதனையை ஏற்படுத்தியது. அடுத்த ஆண்டு தேர்வடம் ஒன்று அன்னையின் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட கடலோரத்தில் ஒரு அடியவரால் கண்டு எடுக்கப்பட்டது. அதனை அவர் விற்கமுற்பட்டபோது நாகபாம்பொன்று வடம் வைக்கப்பட்ட இடத்திலிருந்து தோன்றி படம் விரித்தாடியது. இதனைக்கண்டு பயந்த அந்த அடியார், வடத்தை விற்க மறுத்ததும் பாம்பு மறைந்துவிட்டது. அன்று இரவு அம்பிகை அவர் கனவில்தோன்றி தனது தேவைக்கு வந்த கயிறு எனவே ஆலயத்தில் ஒப்படைக்கும்படி குறிப்பிட்டதாகவும் அடியார் அடுத்தநாள் மங்கள வாத்தியங்களுடன் கயிற்றை ஊர்வலமாக ஆலயத்துக்கு கொண்டுவந்து ஒப்படைத்தார். வடத்தை நேரில் கண்டதும் என் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சியே புதிய சித்திரத் தேர்.

ஆலயத்தில் உள்ள குறைகளை நிவிர்த்தி செய்து மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி அத்துடன் புதிய சித்திரத் தேரையும் ஓடவைக்க வேண்டுமென்ற எனது முயற்சிக்கு அம்பிகையின் அருளால் ஆதரவு தந்து மகா கும்பாபிஷேகத்தை சிறந்த முறையில் நடாத்தி இன்று தேரோட்டத்தையும் நிறைவு செய்யும் பஞ்சாயத்துச் சபையார், பரிபாலன சபையார், தேர்த்திருப்பணிச் சபையார் மற்றும் அடியார்கள் யாவர்க்கும் எனது அன்பு நன்றிகலந்த வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கும் அதேவேளையில் குறுகிய காலத்தில் சித்திரத் தேரினைச் சிறப்புற அமைத்த சிற்பி "சிற்பரதவித்தகன்" திரு. ஆ. ஜீவரட்ணம் அவர்களை வாழ்த்துகிறேன்.

அம்பிகையின் அருளால் நலம்பெறும் அடியார்கள் நல்வழி நின்று பணிபுரியும் பஞ்சாயத்துச் சபையார், பரிபாலன சபையார், தேர்த்திருப்பணிச் சபையார், மற்றும் ஆதரவு நல்கும் அடியார்கள் யாவரும் நலம்பெற எல்லாம்வல்ல அன்னை கண்ணகை என விளங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நிகழ்ச்சியில் பக்தர்கள் யாவரும் பங்குபற்றி பிரார்த்திப்போமாக.

ஓம்
சக்தி துணை
திருச்சிற்றம்பலம்

# மாதவாரப் பதிகம்

### அகத்தியர் பாடல்

வேதராகத்தில் விளங்கும் விமலை விழைந்து தூக்கும்
பாதர் ஆகத்தில் கலந்தாள் பவானி பராபரைக்கு
மாத வாரத்துப் பதிகம் விளம்ப வரந்தருவாய்
நாதயோகத்தின் அனுபவமாம் கணநாயகனே.

### சித்திரை

மூத்தமிழ்போல் முக்கடல் சூழ் குமரிமுனை வளரும்
உத்தமியே ஸ்ரீ சக்கரந்தன்னில் உதித்தவளே
எத்தருணத்திலும் எனைப்பிரியாமல் எனக்கிரங்கிச்
சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே.

### வைகாசி

கைகால் நுடங்கியும் கண்பஞ்சடைந்தும் ஈகாகம் கொத்தி
மெய்தான் அழுகியும் மாள்வோரைக் கண்டு மிகவும் நொந்தேன்
உய்கேனோ ஓவென்று உழலுகின்றேன் நீ உளமிரங்கி
வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன் மணியே.

### ஆனி

ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிர்க்குயிராம்
வானில் மொழியில் கலந்து நின்றுலும் மலர்க் கொடியே
ஞானிகள் தேடும் பரஞ்சுடரே உன்னை நான் பணிந்தேன்
ஆனி மாதத்தில் அருள்புரிவாய் ஜகதாம்பிகையே.

### ஆடி

வாடி வருந்தும் மனம் தண்மையாக மழைபொழிவாய்
கோடி மார்த்தாண்ட சமசோதி வீசும் குளிர்நிலவே
பாடிவந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடிவருவாய் சிவன் கொஞ்சும் அஞ்சுமே.

### ஆவணி

காவணியாவது கனிமலரால் கலை காட்டுகின்ற
பாவணியாவது அநுபூதியால் அன்பு பற்றுகின்றோம்
நாவணியாவது நாமத்தினால் அன்றோ நாடும் என்முன்
ஆவணித்திங்களில் வந்தருள்வாய் என்னை ஆண்டவளே.

### புரட்டாதி

இருட்டாசையாம் குழிவீழாமல் காமூவிரண்டு பேய்கள்
வெருட்டாமல் காஎன்று வேண்டுகின்றேன் இந்த வினையும்
பொருட்டாக எண்ணி அருட்கோல் அளித்த நீ புன்னகைத்து
புரட்டாசித் திங்களில் வந்தருள்வாய் அன்னபூரணியே.

## ஐப்பசி

மைப்படியுங் கயற்கண்ணி மதுரை மரகதத்தால்
கைப்படியா எழில்மான் என்று அரன் உன்னைக் கைப்பிடித்தான்
அப்படியே மணக்கோலங்கண்டு ஏழை அகம் மகிழ
ஐப்பசி மாதம் வருவாய் அடியேன் அடைக்கலமே.

## கார்த்திகை

வார்த்தை குழறிட மெய்புளகிக்க மனம் உருகி
தீர்த்தமாம் கண்ணீரில் நின்தாள் அலம்பித்தினம் தொழுதேன்
பார்த்தவை யாவும் நீ என்றுணரும் பரிபக்குவத்தால்
கார்த்திகைத் திங்கள் வருவாய் கருணைக் களஞ்சியமே.

## மார்கழி

சேர்சிறுகாலை துயில் நீத் தெழுந்தருட் செல்லருடன்
நீர்த்துழைந்தாடி மலர்கொய்து சன்னிதி நின்று நின்றன்
பேர்பலபாடி வணங்கு கின்றோம் எம்பிழை தவிர்க்க
மார்கழிமாதம் வருவாய் அம்மாஞான மாணிக்கமே.

## தை

கைத்தும் கறுத்தும் ஒறுக்கும் கசடரைக் கால்பணிந்து
பொய்த்துன்ப மேனியைப் போற்றுகின்றீர் இருள்போக உள்ளே
வைத்தால் வரம்தருவாள் எங்கள் தாய் என்று வாக்குரைத்தேன்
தைத்திங்கள் வந்தெண்ணம் ஈடேற்ற வேண்டும் தயாநிதியே.

## மாசி

காசியைக் கயிலையைக் கண்டும் கருத்திற் களங்கம் என்னும்
பாசியை நீக்கார் பயன்பெறுவாரோ பரிந்து நன்மை
பேசி அன்புப் பணி செய்வார் பெரியோர் மெய்ப்பேறளிக்க
மாசியில் ஆசிதருவாய் மாசில்லாத மாணிக்கமே.

## பங்குனி

எங்கும் நின்கண்ணுண்டெதையும் நீ கேட்பாய் எலாமுனக்குள்
தங்கும் நீயே தேவதேவாதிகட்கும் தலைவி அன்பால்
பொங்கும் மணந்தே முளைத்துத் தழைக்கின்ற பொற்கொடி நீ
பங்குனித் திங்களில் வந்தருள் செய்வாய் பராசத்தியே.

## ஞாயிறு

ஆயிரம் நாமத்தில் அருச்சனை செய்தேன் அடிபணிந்தேன்
தாயினும் அன்பு பொழிந் தென்னை தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் வறுமையும் போக்கி விளங்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய் சிவலோக நாயகியே.

### திங்கள்

சங்கப் புலவர் கவிக்கு ஒளியூட்டும் தனிப்பொருளே
இங்கிப் பணிக்கே என் அங்கத்தை இட்டேன் எனக்கிரங்கி
சிங்கக் குருளை வடிவேல் முருகனும் சேர்ந்திருக்க
திங்கட்கிழமை வருவாய் அருள்வாய் சிவசத்தியே.

### செவ்வாய்

பங்கஜ பாதம் பணிந்தறியேன் பக்தர் பாடுகையில்
அங்கம் சிலிர்க்க அழுதறியேன் ஏழை ஆயினும் என்
சங்கடம் தீர்த்தருள்வாய் என்றுனையே சரண்புகுந்தேன்
மங்களவாரம் வருவாய் அம்மா ஜீவமாணிக்கமே.

### புதன்

மதமாயைச் சேற்றில் உழன்றேன் சிவாமுத வாரிதியை
இதமாகக் காட்டி நீராட்டி உள்ளத்தின் இழுக்காற்றிப்
பதமானயோக சம்பத்தெல்லாந் தந்தென்னைப் பாடவைத்தாய்
புதவாரந் தோன்றி அருள்புரிவாய் தெய்வப் பூங்குயிலே.

### வியாழன்

ஒருவாய் அமுதை முருகனுக்கு ஊட்டிமற்றென்றை முன்னோன்
பெருவாயில் ஊட்டி மகிழ்கின்றபோது பிதிரும் அன்னம்
தருவாய் எனக் காத்து நிற்கும் இவ்வேளை தவப்பயன்போல
குருவாரம் தன்னில் வருவாய் சிவயோக கோகிலமே.

### வெள்ளி

துள்ளித் திரியும் மனம் உள்ளடங்க நின்தோத்திரங்கள்
அள்ளிக் குடித்தேன் உடலம் கூத்தாட அகக்கதவை
மெள்ளத் திறந்து தெளிந்து குளிர்ந்து விளக்கேற்றினேன்
வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான வித்தகியே.

### சனி

மனக்கவலைக்கு இங்கிடமில்லை தாழ்வில்லை வாட்டமில்லை
இனிக்கிரகங்கள் கொடும் பார்வை இல்லை இடருமில்லை
எனக்கும் இரங்கி என்பாடலை ஏற்றுப் பேரின்பம் ஈந்தாய்
சனிக்கிழமை கண்வருவாய் வசங்கரி சங்கரியே.

### பயன்

திங்கள் ஈராறும் தினங்கள் ஒரேழும் திருப்பெயரை
எங்கிருந்தாலும் புகல்வேன் நான் செல்லும் இடங்கள் எல்லாம்
மங்களம் பொங்கி மரமோங்கி வாழவரம் தருவாய்
நங்கை சிவகாமி அம்மா அகிலாண்ட நாயகியே.

அகத்திய முனிவர் அருளிய

# ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந் தரனாற்றநலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத் தினமா லையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே

## வயிரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
கண்மூடி நெடுங் கனவான தவம்
பெற்றும் தெரியார் நினையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## முத்து

முத்தே வரும் முத்தொழி லாற்றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக்கிணை வாழ் வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

### பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடஞ் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம்பவ ளம்பொழி பாரோ
தேம் பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க் கருள் எண்ண மிகுத்தாள்
மந்திர வேதமயப் பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

### மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திரு நாமமும் நின் துதியும்
நவிலா தவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

### மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
ச்ருதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவர் அருள் பெற அருளமுதே சரணம்
வரதவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

### கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்று துபயன் குன்று வரமும்
தீமேல் இடினும் ஜெயசக் தினைத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

### பதுமராகம் (புஷ்ப ராகம்)

ரஞ்சனி நந்தினி அங்கனி பதும
ராக விலாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணீ
சாம்பவி சந்திர கலாதரி ராணி

அஞ்சன மேனி அலங்கருத பூரணி
    அம்ருத சொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிலாசினி
    மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.


### வைடூரியம்

வலையொத் தவினை கலை யொத்த மனம்
    மருளப் பறையா ளொலி யொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத்தகுமோ
    நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றனுபூ திபெறும்
    அடியார் முடிவால் வைடூ ரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
    மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.


### பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமா லைநவின் றிடுவார்
அவர்அற் புதசக் தியெலாம் அடைவார்
சிவரத் தினமாய் திகழ்வார் அவரே.

ஜெய சிவரமணி குருகுஹ ஜனனி ஜெய மனவனஹரிணி
ஜெய ஓம் ஸ்ரீமாதா—மாதா—ஜெய ஜெய ஜெகன்மாதா
மாதா ஜெய ஓம் ஸ்ரீமாதா—மாதா—ஜெயஜெய ஜெகன்மாதா.



அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்
பொன்கைநகர் (புங்குடுதீவு.)




கடலிலே கண்டு எடுக்கப்பட்ட கண்ணகை அம்மன்




ஆலய வாசலில் நிற்கும் ஆலமரம். அதன்கீழ்
பிரதம குரு சிவஸ்ரீ ப. கணேசராசக் குருக்கள்




கண்ணகி விக்கிரகத்துடன் கண்டு எடுக்கப்பட்டு வடக்கு வீதியில்
அமைந்திருக்கும் பத்திரகாளி கோயிலின் தோற்றம்.



கலையம்சம் நிறைந்த அம்பிகையின் ராஜகோபுரம்.




அம்பிகையின் வடிவம் சிறப்புப் பொலிவுடன் திகழும்
ஆலய மூலஸ்தாபன விமானம்.



27-6-79ல் மகா கும்பாபிஷேகத்தை நடாத்திய சிவாச்சாரியார்கள்
நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
சுன்னாகம் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோருடன்
பஞ்சாயத்துச்சபையார்.




27-6-79-ல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் பங்கு பற்றிய சிவாச்சாரியார்களில் ஒரு பகுதியினர்.



கண்ணகை அம்மன் சிலை கடலில் மிதந்துவந்தபோது, அதை எடுத்துப் பிரதிஷ்டை செய்த இடம். இங்குள்ள பூவரசமரம் நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்தது.



கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி தீர்த்தமாடும் திருக்குளம். அதன் முன்புறத்தில் இந்துசமுத்திரம் காணப்படுகிறது.




27-6-79 கும்பாபிஷேகத்துக்கு முன் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின்போது பங்குபற்றிய பெருங்குரு அமரர் நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் புரவலர்கள் திரு. என். கே. மயில்வாகனம், திரு. சி. முத்துக் குமாரு ஆகியோரைப் படத்தில் காணலாம்.




1971-ம் ஆண்டு கடலில் மிதந்துவந்து கிடைத்ததன்மூலம்
புதிய சித்திரத்தேரை உருவாக்க காரணமாய் அமைந்த தேர்வடம்.




புதிய சித்திரத்தேரை உருவாக்கிய ஸ்தபதி
"சிற்பரதவித்தகன்" திரு. ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார்




ஆலயத்திற்கு வருகைதந்த இந்திய - தமிழ்நாடு மாமல்லபுரம்
சிற்பக்கூட அதிபர் "சிற்பராஜ விற்பன சிகாமணி"
ஸ்தபதி திரு. வை. கணபதி அவர்களை சிவநெறிப்புரவலர்
திரு. சி. முத்துக்குமாரு வரவேற்கிறார்.




6-11-78-ல் புதிய சித்திரத்தேருக்கு முதல் அச்சு வைத்தல்



முதல் அச்சு வைத்தல்



முதல் அச்சுவைத்தல்



13-3-79-ல் பவளக்கால் நிறுத்துதல். தேரை உருவாக்கும் கலைஞர்களுக்கு தட்சணை வழங்குதல்.



அரும்பெரும் பணிகளை ஆற்றி ஆலய வரலாற்றில் பெருமைக்குரியவராக
விளங்கும் அமரர் திரு. மு. முத்தையாபிள்ளை அவர்கள்

# மலர் மலர...........

"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்."

பொன்னைகநகர் கன்னகை அம்மன் எனவழங்கும் ஆதிபராசக்தியான அன்னை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியின் திருப்பணிப் பெயரால் ஓர் மலர் மலர்ந்து மணம் வீசுகிறது என்றால் அதில் அற்புதம் என்ற ஒன்று இருக்கவே செய்யும். ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதார்? அவள் ஆட்டுவிக்கிறாள் - நாம் ஆடுகிறோம். அம்பிகை பக்தரான உயர்திரு மு. முத்தையா பிள்ளை அவர்கள் முயற்சியால் 1964ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற போது பெரியாரின் மனதில் தோன்றிய இருகுறைகள், ஒன்று இராஜ கோபுரம் மற்றது சித்திரத்தேர். குறைகளை நிவிர்த்தி செய்ய அடியார்கள் மனதில் அரும்பிய மொட்டு வளர்ந்து விரிந்து மணம்பரப்பும் நிலைக்கு வந்துவிட்டிருப்பது அன்னையின் அற்புதமேயன்றி மனித முயற்சியல்ல...!

மனிதன் என்று பூமிதனில் பிறந்து விட்டால் உழைத்து, உண்டு, மகிழ்ச்சியாக வாழ்ந்து மடிந்துவிட்டால் மட்டும் போதுமா? பெறற்கரிய பேறுன மானிடப் பிறவியைத்தந்த இறையருளுக்கு நாம் என்றென்றும் தொண்டாற்றும் பேறு கிடைக்க வேண்டுமே. அப்படிப்பட்ட தொண்டு மனப்பான்மையுடன் தமது சுயவாழ்வு, சுகவாழ்வு உழைப்பு செல்வம் ஆகியவற்றில் எல்லாம் படியளந்த நாயகியான அம்பாளுடைய ஆலயத் தொண்டுக்கு முதலிடம் அளித்து நிற்கும் அன்பு மதிப்புக்குரிய பஞ்சாயத்துச் சபையார் ஆலயபரிபாலன சபையார் பின்னே நாமும் சேர்ந்து சேவை செய்து வருகின்றோம். அதேவேளையில் எமது முன்னோடிகளாய் விளங்கும் அவர்கள் இட்ட பணிகளை நாம் செய்யும் போது எமது ஆக்கபூர்வமான யோசனைகளையும் தட்டிக்கழிக்காது "நல்லதை நாம் துணிந்து செய்வோம்." என்று தட்டிக் கொடுப்பார்கள். அம்பிகையின் அருளால் அவர்களின் பின் நாங்களும், எங்களோடு சேர்ந்து இளைஞர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடற்ற ஒருமித்த தொண்டுணர்ச்சியுள்ள உள்ளங்களும் சேர்ந்து நிற்பதால் ஆலய வளர்ச்சியில் முன்னேற்றமான பல செயற்திட்டங்களைக் காணமுடிகின்றது.

உயர்திரு முத்தையாபிள்ளை அவர்கள் உள்ளத்திற் தோன்றிய குறை பல. அம்பிகை பக்தர்கள் உள்ளத்திலும் தோன்றியது. அதேபோன்று எனது தந்தையார் உள்ளத்திலும் தோன்றியதில் வியப்பில்லை. அம்பிகையை புதிய சித்திரத் தேரில் அமர வைத்து அழகு பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் சிறியேனை தேர்த்திருப்பணிச் சபையில் ஒருவனாக நின்று முழுநேர சேவை செய்ய அனுமதித்தும் அதற்கு வேண்டிய ஆதரவுகளையும் தந்த என் அன்புத் தந்தையார்க்கும் ஆதரவு தந்த என் அன்புத் தம்பி கிருபானந்தனுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகள்.

தேர்த்திருப்பணிக்கு நிதி சேகரிக்க நாம் முனைந்து நின்ற வேளைகளில் என்னுடன் சேர்ந்து இயங்கியவர்கள் திரு. த. கிருஷ்ணசாமி இளைப்பாறிய ஆசிரியர் திரு. அ. க. கன்னையா, திரு. சி. சின்னத்துரை ஆசிரியர், திரு. க. நடேபநாதன் திரு. சி. சிதம்பரநாதன், திரு. செ. வைரவநாதன் திரு. ஆ. துரைச்சாமி ஆகியோரே

யாகும். தேர்த் திருப்பணிச் சபையில் மேலும் இருந்தபோதும் இயங்கும் உறுப்பினர்களாக இருந்தவர்கள் மேலே கூறப்பட்டவர்களேயாகும்.

கொழும்பில் நாம் நிதி சேகரிக்க வாகன உதவி புரிந்த திரு. ஆ. துரைச்சாமி அவர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் உதவிபுரிந்த திரு. காந்திக்கும் எமது நன்றிகள்.

தேர் நாள் வேலையின்போது தலைமை தாங்கிய யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிபதி திரு. **K. V.** நவரத்தினம் அவர்களுக்கும் கிரிகைகளை நடாத்திய சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

எமது குடும்பத்தில் ஒருவர் போன்று எம்முடன் அன்பாக பழகி குறுகிய காலத்தில் புதிய சித்திரத் தேரை முழுமையாக பூர்த்தி ஆக்கித்தந்த ஈழத்தின் தலைசிறந்த சிற்ப ஆச்சாரியார் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ''சிற்பக்கலாமணி'' ''சிற்பகேசரி'' ''சிற்பரதவித்தகன்'' திரு. ஆ. ஜீவரட்ணம் அவர்களுக்கும் அன்னாரது சிற்பாலய சிற்பக்கலைஞர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகுக.

தேர் வேலைகள் தடையின்றி நிகழ பணமாகவும் பொருட்களாகவும் உதவிய அம்பாளின் பக்தர்கள் அனைவருக்கும் அன்னையின் அருள் கிடைக்க வேண்டுகிறோம். எமது அழைப்பை ஏற்று வருகை தந்து தேர்முட்டிக்குரிய நிலையத்தை எடுத்துத் தந்த இந்தியா தமிழ்நாடு மாமல்லபுரம் சிற்பக்கூட அதிபர் ''சிற்பராஜ விற்பன சிகாமணி'' ஸ்தபதி திரு. வை. கணபதி அவர்களுக்கு எமது அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகுக.

புதிய சித்திரத் தேரை நீண்டகாலத்திற்கு பாதுகாக்க தேர்முட்டி அவசியம் இதை உணர்ந்து தனது பெற்றோர்களின் நினைவாக தமது குடும்ப உபயமாக நிறைவு செய்து தந்த கொழும்பு பிரபல வர்த்தகர் திரு. க. தியாகராசா அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும் அன்னையின் அருள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

தேர்முட்டி வேலைகளை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் நிர்மாணித்து தந்த கட்டிடக் கலைஞர் திரு. இரத்தினம் குழுவினர்க்கும் எமது நன்றி உரித்தாகுக.

ஓர் ஆண்டுக்குள் தேர் ஓட வேண்டுமென நாம் எடுத்த முயற்சிக்கு ஏற்றாற்போல் பல திருப்பணிகளை ஒரேநேரத்தில் நிறை செய்து மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்க முன்னின்றுழைத்த அம்பிகை அடியார்களுக்கு எமது உளம் கனிந்த பாராட்டுக்கள். ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையை சித்திரத் தேரில் ஆரோகணிக்க வைத்து அழகு பார்க்க வகை செய்த அனைவர்க்கும் தேவியின் அருள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

இம்மலர் எமது சபையின் உறுதியான உழைப்பாலும் ஒருமித்த உணர்வாலும் ஆதிசக்தி நாயகியின் பூரண அநுக்கிரகத்தாலும் எமக்கு உறுதுணையாக நிற்கும் முதியவர்கள் இளைஞர்கள் குறிப்பாக வர்த்தகப் பிரமுகர்கள் அன்பாலும் ஒருங்கிணைந்த சக்தியாலும் எமது சிவாச்சாரியாரும் ஆலயக் குருக்களுமான பிரம்மஸ்ரீ ப. கணேசராசக்குருக்கள் அவர்களினதும் அவர் குடும்பத்தினரதும் அன்பான ஒத்துழைப்பாலும் மலர்ந்து மணம் வீசுகின்றது.

மலர் சிறப்புற ஆதரவும் ஆலோசனையும் தந்துதவிய ''சித்தாந்த சிகாமணி'' சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்கள் பாராட்டுக்குரியவர்.

மலர் மலர்ந்து மணம் வீச பேருதவி புரிந்த இணுவில் இந்து மகாசபைச் செய

லாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம் அவர்களுக்கு எமது சபை என்றென்றும் கடமைப்பாடுடையது. அன்னாரின் நட்புரிமை என்றும் நிலைத்திருக்க அன்னையின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்,

இம் மலர் சிறக்க வாழ்த்துரை, விடய தானங்கள் உதவியோர்க்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், படங்கள் உதவிய ஏ. வி. எம் படப்பிடிப்பாளருக்கும், அழகுற குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய யாழ். சாந்தி அச்சகத்தினர்க்கும் நன்றிகூறும் வேளையில் எங்கள் திருத்தொண்டுக்கு வழிகாட்டியோர் சார்பிலும், ஒத்துழைத்தோர் சார்பிலும், ஆதரவு நல்கியோர் சார்பிலும், அகில உலக நாயகியான அன்னை இராஜராஜேஸ்வரியின் கமலமலர்ப் பாதங்களில் இம்மலரை சமர்ப்பித்து விடை பெறுகின்றேன்.

வல்லபம் ஒன்(று) அறியன் சிறியேன் நின்மலரடிச் செம்
பல்லவம் அல்லது பற்(று) ஒன்(று) இலேன்! பசும்பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அலமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

27-7-79

மு. கனகசபாபதி
தேர்த் திருப்பணிச்சபைக்
குழுவினர் சார்பில்

## வழிபாட்டு முறை

மரமென்று பார்ப்பவருக்கு யானை தெரியாது. யானை என்று பார்ப்பவருக்கு மரம் தெரியாது. மரத்தை மறைத்தது மாமதயானை என்பது திருமந்திரம். ஆலயத்தில் செல்பவர்கள் பார்வையைப் பலபக்கம் செலுத்தாமல் நிலத்தை நோக்கியவண்ணம் வலம்வந்தும் இறைவனிடத்திலேயே பார்வையைச் செலுத்தியும் வழிபடவேண்டும்.

பலசரக்குக் கடையில் முந்திரிப்பருப்பு, சேமியா, சீனி, புண்ணுக்கு, மயில்துத்தம் இப்படிப் பலவும் காட்சியளிக்கும். பாயசத்துக்குச் சாமான் வாங்கப் போனவன் அங்கு காட்சியளிக்கும் புண்ணுக்கையும் மயில் துத்தத்தையுமா வாங்குவான். கடைக்காரனைப் பார்த்து நீ ஏன் இவற்றை வைத்திருக்கிறாய் என்றும் கேட்கமுடியாது தானே. நாம் பாயசத்துக்குரிய சீனி முதலியவற்றைப் பெற்றுத் திரும்பவேண்டும்.

அதுபோல இறைவனுடைய திருவருளைப் பெறும் பொருட்டுக் கோயிலுக்குச் செல்லுகின்ற நாம் அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தாமல் பக்திப் பரவசத்துடன் வழிபாடு செய்யவேண்டும்.

வாரியார்

உ

சிவமயம்

தேவி துணை

புங்குடுதீவு கிழக்கு

கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள்

# திருவூஞ்சல்

## காப்பு

திருவளரும் புங்கைநகர்த் தென்பால் இன்பத்
 தெய்வமணங் கமழ்கோயிற் காட்டில் சீரார்
பெருவளஞ்சேர் இத்தியடிப் புலத்தே வைகும்
 பிராட்டிஸ்ரீ ராஜராஜேஸ் வரிமேல் ஊஞ்சல்
மருவுமிசைப் பாவுரைப்ப நாவின் மங்கை
 மகிழ்ந்துநலந் தரக்கலட்டி மன்னி ஓங்கி
உருவளரும் வரசித்தி விநாய கன்தன்
 உபயபதம் உளத்திருத்தி வழுத்தல் செய்வாம்.

## நூல்

சீரிலங்கும் வைரமணிக் கால்கள் நாட்டித்
 திகழ்நீலங் கொண்டு நெடுவிட்டம் நீட்டிப்
பேரிலங்கும் சிலாபமுத்து வடமும் பூட்டிப்
 பிறங்குமொளி ஆடகப்பொற் பலகை மாட்டிப்
பாரிலங்குங் காஷ்மீரப் பட்டும் சார்த்திப்
 பண்புடனே அமைந்திலங்கும் ஊஞ்சல்மேவி
ஏரிலங்கப் பெருந்தேவி ஆடீர் ஊஞ்சல்
 இராஜராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல். 1

எங்கெங்கும் தெங்குதிரண் டெழுந்தே யோங்க
 ஏற்றமுறு செழும்பயிர்கள் இலங்கப் பாங்கர்ப்
பொங்குமணி மாளிகைகள் பொலிய, நன்னீர்
 புனிதமுறு கூவல்தொறும் பொங்கிப் பாயச்
சங்கினெடு மணிகொழித்துத் தரங்கம் பாடித்
 தாழ்ந்திறைஞ்சத் தவளமணல் எக்கர் சார
இங்கிதமார் இத்தியடிப் புலத்தே மன்னும்
 இராஜராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல் 2

மன்னர்குலம் மாளிகையில் மகிழ்ந்தே போற்றும்
மாதவமே மறைக்கொழுந்தே யாடீர் ஊஞ்சல்;
செந்நெல்மலி சீகாழிச் செம்மற்(கு) அன்று
சிவஞானப் பாலளித்தோய் ஆடீர் ஊஞ்சல்;
தென்னவனுர் செருக்கறுத்த செல்வி கற்பின்
தீரமிகு கண்ணகியெம் தெய்வப் பாவை
முன்னுக அமர்ந்தவளே ஆடீர் ஊஞ்சல்
மோகினி ராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 3

கங்கையொடு சோமியும்வெண் கவரி வீச
காளியடைப் பையேந்தக் கணங்கள் வாழ்த்தத்
துங்கமிகும் துணைப்பதங்கள் தலையிற் சூடித்
தூயநில மகள்பணிந்து துதிகள் சொல்ல
நங்கைகலை மகள்சாம கீதம் பாட
நாரதர்யாழ் மீட்கநந்தி தாளங்கொட்ட
செங்கமல மங்கையங்கை வடந்தொட்டாட்டத்
தேவிராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல். 4

ஐம்புலன்கள் அடக்கிநெறி உணர்ந்த சீலர்
அகத்தினிக்கும் ஆரமுதே ஆடீர் ஊஞ்சல்
செம்புலத்துப் புலவர்குழாம் சிரமேற் கொள்ளும்
செல்விசிந்தா மணியரசி ஆடீர் ஊஞ்சல்
நம்புசிவ நாமமென்றும் நவிலுந் தொண்டர்
நல்லிதயக் கனவெல்லாம் நனவ தாக்கித்
தெம்புதரு மீனுட்சி ஆடீர் ஊஞ்சல்
தேவிராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல். 5

ஆறுறு தத்துவமும் கடந்த அண்ணல்
அன்பரகத்து அடங்குபர சிவத்தின் ஆதிப்
பேருன அருட்சத்திப் பெருக்கே அம்மா
பெருமாட்டி சீமாட்டி ஆடீர் ஊஞ்சல்
நீருகிக் கொடுமையெலாம் நீங்க அன்று
நெஞ்சமிசைத் தீயெழுப்பி மதுரைகாத்த
வீருரும் பத்தினியும் காண வீர
வித்தகிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல். 6

ஏழ்பிறப்பும் காப்பவளே ஆடீர் ஊஞ்சல்
எங்கெங்கும் சிவஞான விளக்கை ஏற்றித்
தாழ்வகற்றித்தொண்டர் குழாம் தழைக்கச்சைவத்
தலைமைநெறி தந்தவளே ஆடீர் ஊஞ்சல்

பாழ்கடந்த பரநிலையின் பரிசும் மாண்பும்
பகராதே பகர்ந்துண்மை பலவுங் காட்டி
வாழ்வளிக்கும் வள்ளலிடப் பாகங் கொண்ட
மனோன்மணி ராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 7

அருளாட்சி புரிமுடி மின்கதிர்கள் ஆட
அணிகாதிற் குழையாட அளகம் ஆடப்
பொருளாட்சி பொலிதரு வெண்தரளம் ஆடப்
பொன்னரை ஞாண்மேகலைகள் பொருந்தி ஆடத்
தெருளாட்சி திகழ்பாதச் சிலம்பும் ஆடத்
திசையாடச் சிவனடியார் கண்ணீர் ஆட
உருமாட்சி யுறும்அன்னே ஆடீர் ஊஞ்சல்
உலகோம்பும் ராஜேஸ்வரி ஆடீர் ஊஞ்சல். 8

சிவஞானத் தேனமுதே ஆடீர் ஊஞ்சல்
திருபோற்றும் செம்பொருளே ஆடீர் ஊஞ்சல்
அவதானம் அளித்தருள்வீர் ஆடீர் ஊஞ்சல்
அருட்குரவர் அகத்தமர்வீர் ஆடீர் ஊஞ்சல்
தவயோக ஞானநிதி ஆடீர் ஊஞ்சல்
தமிழ்இனிக்கப் பாடுவிப்பீர் ஆடீர் ஊஞ்சல்
பவநோய்கள் பாற்றுவிப்பீர் ஆடீர் ஊஞ்சல்
பராசக்தி ராஜேஸ்வரி ஆடீர் ஊஞ்சல். 9

ஆனைமுகன் வாழி யருள்முருகன் வாழி
அன்பர்தொழு வைரவர்மா காளி வாழி
தேனைநிகர் திருமுறைச் செந்தமிழும் வாழி
சிவதொண்டர் மறையுணரந்தோர் செழித்து வாழி
ஞானமிகும் ஐந்தெழுத்தும் நீறும் வாழி
நற்புங்கை மணிநகரும் நாடும் வாழி
வானமுகில் வாழிகல்வி செல்வம் வாழி
வரராஜ ராஜேஸ்வரி ஊஞ்சல் வாழி.

## லாலி

லாலி லாலி அம்பா லாலி லாலி
லலிதாம்பிகா வருக லாலி லாலி
ஆதிமுதல் நாயகியே லாலி லாலி
அன்பர்துயர் தீர்ப்பவளே லாலி லாலி
வேத முடிவானவளே லாலி லாலி
வெற்றிதரும் அபிராமி லாலி லாலி.

### எச்சரிக்கை

பரமசிவனருட் சத்தி பரையே எச்சரிக்கை!
பகர்வரிய வரமருளும் பரையே எச்சரிக்கை!
அரனருகி லமரன்னை அபயம் எச்சரிக்கை!
ஆதிரா ஜேஸ்வரியெம் அம்மா எச்சரிக்கை.

### பராக்கு

பத்திநெறி யுத்தமர்தம் பரிவகற்றி என்றும்
பரமசுகம் அருள் பராசத்தி பராக்கு!
சத்தி சிவசத்தியண்டம் தாங்கி யறந்தாங்கும்
சத்தியமே நித்தியமே தாயே பராக்கு!
வித்தையருள் ராஜரா ஜேஸ்வரி பராக்கு
வீரமிகு முலகன்னை வெற்றி பராக்கு
முத்தியருள் சிவகாமி முதல்வி பராக்கு
முந்துதமிழ் கேட்டுருகும் எந்தாய் பராக்கு!

### மங்களம்

#### பல்லவி

ஸ்ரீராஜ ராஜேஸ்வரிக்கு ஜெயமங்களம் — என்றும்
சுத்தசத்தி உத்தமிக்குச் சுபமங்களம். (ஸ்ரீ)

#### அநுபல்லவி

மாதா மனோன்மணிக்கு மன்னுபரமேஸ்வரிக்கு
வேதாந்த நாயகிக்கு வீரபத்திர காளிக்கு (ஸ்ரீ)

#### சரணம்

வேழமுக நாதனுக்கும் ஜெயமங்களம் — வீர
வெற்றிவடி வேலவற்கும் ஜெயமங்களம்
காளி மணாளனுக்கும் ஜெயமங்களம் — கற்புக்
கண்ணகி அம்மனுக்கும் ஜெயமங்களம். (ஸ்ரீ)

பொங்கு பொருள்வல்லவர்க்கும் ஜெயமங்களம் — எங்கும்
போற்றுகலை வாணருக்கும் ஜெயமங்களம்
புங்கைநகர் மக்களுக்கும் ஜெயமங்களம் — என்றும்
புவனம் முழுவதற்கும் சுபமங்களம். (ஸ்ரீ)

இயற்றியவர்: **வித்துவான் சி. ஆறுமுகன்**

ஓம்
சக்தி துணை

# உன் பாதசேவையருள்வாய்

— ஆசிரியமணி சி. க. நாகலிங்கம் —

சித்திரமணி மகுடமும் பத்மமலர் வதனமும்
செம்பவளவாய் முறுவலும்
சிந்துரப் பொட்டழகும் செய்யவிரு காதினில்
திகழும்பொற் கொப்பினழகும்
முத்துமூக் குத்தியும் நெஞ்சிற் பதக்கமும்
முருகுதவழ் மலர் மாலையும்
முத்தாரம் கையினிற் கடகமும் கணையாழி
மொய்த்திட்ட விரலினழகும்
கொத்துமணி மேகலையும் வஞ்சிநுண்ணிடையழகும்
கோகனகப் பாதச்சிலம்பும்
கோடானு கோடியருணோதயப் பிரகாசமும்
கொண்டநின் காட்சி யடியேன்
எத்தனை விதங்கடான் ஒன்ணினுங் காணாது
ஏங்குதே நெஞ்சமம்மா
எழிலான புங்கைநகர் தென்கரையில் தங்கிவாழ்
இராசராசேஸ்வரி அம்மையே. 1

தாயார் வயிற்றினில் கருவாகி உருவமது
தாங்கிப் பிறந்து நாளும்
சஞ்சலமதுற்றவொரு தடியனாய் மிடியோடு
தளர்வுற்றிருந்தும்காம
மாயாமயக்கினால் மதிகெட்டு கதிகெட்டு
மங்கையர்கள் கொள்ளையதனால்
மயங்கிக்கிடந்து பல மக்களைப்பெற்றுமே
வாழ்விதென எண்ணிநானும்
ஓயாதுழைத்துழைத் தொருபயனும் கண்டிலேன்
உன்பாத சேவையருள்வாய்
உத்தமி பத்தினி நித்தியகல்யாணியே
ஓம் நமோ பகவதி பார்வதி
வாயாழி சங்கின மொத்துதிரை முத்தெறியும்
புங்கைநகர் தென்கரையிலே
வந்த பரமேஸ்வரி சகல புவனேஸ்வரி
இராசராசேஸ்வரி அம்மையே. 2

சீருண்டு பேருண்டு செல்வமொடு கல்வியின்
　　சிறப்புண்டு சிதையாத விரு
திருவுண்டு உருவுண்டு மாருத உறவுண்டு
　　திறன் மனைவி மக்களுண்டு
பாருண்ட புகழுண்டு மகிழ்வுண்டு பரந்தநல்
　　வாழ்வுண்டு வளமுமுண்டு
பகரரிய அறிவுண்டு பக்தியின் செறிவுண்டு
　　பரமுத்தி சித்தியுண்டு
வாருண்ட கொங்கையிள மங்கையுமையாள் தனது
　　வாளுண்ட நயன மலரின்
வருகருணை ஆனந்த வெள்ளத்துள் மூழ்குண்டு
　　மாந்தித்திளைத்த போக்கு
ஏருண்ட சங்கின மொத்துதிரை முத்தெறியும்
　　எழில் புங்கை தென்கரையிலே
இருந்த பரமேஸ்வரி சகல புவனேஸ்வரி
　　இராசராசேஸ்வரி அம்மையே. 3

தில்லையில் வாதாடி ஆடுமாகாளி நீ
　　திரிபுர மெரித்தவளும் நீ
திரிசூல மங்கைநீ கோபாலன் தங்கை நீ
　　திரிபுவன நங்கைநீயே
வல்லைதனில் மகிடனை வதைத்துயிர் குடிக்கவே
　　வந்திட்ட துர்க்கை நீயே
வருகின்ற பேய்பில்லி சூனியம் மாரணம்
　　மாற்றிடும் மாரி நீயே
பொல்லாத நோய்பிணி தீராத மிடிவறுமை
　　போகாத கவலை எல்லாம்
போக்கியருள் தேவியே பாவியேன் ஆவியுன்
　　பொன்னடி இருத்தவசமோ
மல்லாழி சங்கின மொத்துதிரை முத்தெறியும்
　　புங்கை நகர் தென்கரையிலே
வந்தபரமேஸ்வரி சகல புவனேஸ்வரி
　　இராசராசேஸ்வரி அம்மையே. 4

சங்கரி பயங்கரி மாதவன் சோதரி
　　சடாதரி குமரிகாளி
சத்திசிவ காமிஅபிராமிபரை வாமியுயர்
　　சண்டிசாமுண்டிநீலி
புங்கவி மனோகரி வடிவுடைய நாயகி
　　புராதனி ரண பயிரவி

பூரணி மகேஸ்வரி சாமளா பகவதி
புராந்தகி பவானி அமலே
துங்கமணி அக்கையணி சொக்கரிடமுக்கணி
சுந்தரி கல்யாணி கவுரி
சோதிமாதேவியே பாவிதுயர் களையதிரி
சூலியருள் பாலியம்மா
பொங்காழி சங்கின மொத்துதிரை முத்தெறியும்
புங்கைநகர் தென்கரையிலே
போற்றுபர மேஸ்வரி சகல புவனேஸ்வரி
இராசராசேஸ்வரி அம்மையே. 5

பத்தியோ டடியார்கள் சித்தமது பூரித்து
பரிவினேடாடியாடிப்
பாடியும் ஆனந்த வெள்ளத்துள் மூழ்கியே
பரவசமடைய வம்மா
உத்துங்க சுந்தரச் சித்திரத் தேரேறி
உல்லாச சல்லாபமாயிரத்ன
ஒண்ணிழைகள் கலகலென வருகின்ற
ஒய்யார உன்னத அலங்காரியே
சித்திதரு காட்சிகண் டுன்புதுமை அடிய
னேன் செப்புதற் கெளிதாகுமோ
செகமெலாம் உலாவிவரும் அலங்கிருத
சிங்கார திரிபுரை மனோன்மணி
கத்துகடல் சங்கின மொத்து திரைமுத்
தெறியும் புங்கைநகர் தென் கரையிலே
காத்த பரமேஸ்வரி சகல புவனேஸ்வரி
இராசராசேஸ்வரி அம்மையே. 6

## மாதா கண்பாராய்

பங்கய வல்லி பார்வதி கவுரி பத்மபாதத்தி
பகவதி குணவதி பர்வத பத்தினி பஞ்சபாணத்தி
சங்கரி ஈஸ்வரி சாமளே அசுர மகிஷசங்காரி
சந்திரவதனி சிந்துரதிலதி சதுரின்வேதத்தி
மங்குல நிறத்திமாசில அறத்தி மங்கைசிவகாமி
மந்திரரூபி தந்திரகாரி மாதாகண் பாராய்
தெங்கு மலிந்துயர் புங்குடுதீவினில் தென்கரை தங்கியுறை
சிந்தை மகிழ்ந்திட வந்தருள் செய்திடு தேவிகண்ணகியே.

அன்ன நடைச்சி மின்னுமிடைச்சி ஆதிசிவசோதி
அக்குவடத்தி ஐயன் இடத்தி ஆச்சி மீனுட்சி
கன்னல் மொழிச்சி கருணை விழிச்சி காளிகங்காளி
கார்த்தியாயினி காமரூபிணி கன்னிமுக்கண்ணி
மன்னும்மாதரி மாலின் சோதரிமாரி கௌமாரி
மங்களநாயகி மாலினி தேவகி மாதாகண்பாராய்
தென்னைவளர்ந்துயர் புங்குடுதீவினில் தென்கரை தங்கியுறை
செந்தாமரைவாழ திருவே உருவே தேவி கண்ணகியே.

## பவனி வந்தாள்

### பல்லவி

தேரில் பவனி வந்தாள் - ஈஸ்வரி
பாரில் சிறந்திலங்கும்
பதி புங்கைநகர் தன்னில் - தேரில்

### அநுபல்லவி

ஒன்ருய் அடியார் கூடி
ஓடிட மடம் பிடித்து
என் தாய் இராச ராச
ஈஸ்வரியே என்றிழுக்க - தேரில்

### சரணம்

கருணு கடாட்சியருள் காமாட்சி அழகி
கண்பாராய் அன்னே அருள்தாராய் இன்றே
சரணம் சரணம் என்னும் பத்தி அடியார்களுக்கு
சவுரிய சௌபாக்கியமும் சகமதில்தரும் அம்மை.

### வெண்பா

புங்கைநகர் தென்கரையில் போற்று மடியார்கள்
மங்கைஇ ராசராச ஈஸ்வரியின் - துங்கமணி
பாத கமலம் பணிவார்க் கிலையாமே
பாதக மலப் பயன்.

ஓம்
சக்தி துணை

# தேர் மீதிலே வரும் அம்பிகை

— சங்கீதபூஷணம் இ. நா. கனகலிங்கம் —

கண்டேன் கண்ணாரக் கண்டேன்
அன்னை கண்ணகை அம்பிகை
ரதத்தினில் பவனி வரும் அற்புதக் காட்சியை
கண்டேனே கண்ணாரக் கண்டேனே
கருணை பொழியும் திரு முகத்தில்
தவழும் புன் சிரிப்பைக் கண்டு
எங்கள் உள்ளம் உருகுதம்மா!
நாம் எம்மை மறந்தோமம்மா!
இந்த அருங் காட்சியை நாம் எப்போ
காண்போம் என்றிருந்தோம்
மனம் கனிந்து காட்சி தந்தாயம்மா தாயே
நாம் என்ன மாதவம் செய்தோமம்மா.

சீ ரோங்கு புங்கைநகர் பதி திகழ்
கண்ணகை தேவி தாள்
பணிந்தோர்க்கு தொல்லை நீங்கும்
கொடும் துன்பம் நீங்கும்
ஊர் தாங்கு சான்றோர் அடியவர் ஆகையால்
ஒப்பிலா வகை யமைந்த
தேர் மிதிலே வரும் கண்ணகை அம்பிகை
மலர் பதம் போற்றி போற்றி.

# இரதோற்சவ மகத்துவம்

— சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் —

*(தேர் நாள்வேலையன்று ஆற்றிய உரையின் சுருக்கம்)*

''அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்''

என்ற சிவஞான போதச் சூத்திரத்தில் சங்கார காரணனுயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்கின்றது. ஐந்தொழிலில் நடுநாயகமாக உள்ளது அழித்தல் தொழிலாகும். அழித்தல் தொழிலின் தத்துவமாக விளங்குவதுடன் கருவியாகவுமுள்ளது தேராகும். மும்மறையுள் நடுமறையாகி யசுர்வேதத்தில் நடுமத்தியாகிய நாலாவது காண்டத்தில் காணப்படும் ஸ்ரீருத்திரத்தில் ரதிப்யகா - தேரில் செல்பவராயும், ரதேப்யகா - தேர்களாயும்; ரதபதிப்யஸ்ச - தேர்களின் தலைவராகவும், ரதகாரேப்யகா-தேர் செய்பவராகவும் விதந்து கூறுகின்றமையால் உற்சவத்துள் தேர் உற்சவம் சிறப்புடையது.

பசு பதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், உலகச் சராசரப் பொருட்களை ஒவ்வொரு உறுப்புக்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் கூராகவும், வாயுவை வேகமாகவும், பிரமாவைச் சாரதியாகவும் கொண்டு நம்மிடமுள்ள அசுரர்களாகிய மும்மலங்களையும் சங்காரம் செய்வது ரதோற்சவக் கருத்தாகும்.

இக்கருத்தை:

**விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளுங்
கருது கின்ற வூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டங்
கருதி நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையவே.**

என்ற ஞானசம்பந்தர் வாக்கினுல்உணர்க.

சக்தியைப்பற்றிச் சிந்திக்குமிடத்து சக்தி ஒன்றே. அதன் தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும். நவசக்திகள் என்றும் சப்தமாதர்கள் என்றும் ஆகமங்களில் சக்திதத்துவத்திற்கு அமைய விரித்துக் கூறுவதோடு சக்திவழிபாட்டைத் தனியே கூறுகின்ற சாக்த நூலில் சிறப்பாக பலவடிவங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் ஸ்ரீ இராஜராஜேஸ்வரியும் ஒன்று. இவளது மூலமந்திரம் இருபத்தெட்டு எழுத்துக்கள் கொண்ட மகா சோடசீ எனப்படும். ஞானத்தின் முழு நிறைவைக் குறிக்கும். இவள் 40 வயதினள் என ஸ்ரீவித்தியா என்ற நூல் கூறுகின்றது.

இவள் எழுந்தருளியுள்ள இவ்வாலயத்தில் எமது மெய்யடியார்கள் புதிய சித்திரத்தேர் ஒன்றை உருவாக்க இன்று முன்வந்திருக்கிறார்கள். ஆகவே நாங்கள் எல்லோரும் இந்தச்சமயத்தைக் கைவிடாமல் ஒருங்குசேர்ந்து ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் அருளைப்பெற எம்மாலான பணிகளைப் புரிந்து இஷ்டசித்திகளைப் பெறுவோமாக.

உ

# கடவுளைக் காண்போமா?

— புலவர் ஈழத்துச் சிவானந்தன் —

கடவுள் என்றால் என்ன? ஆணா? பெண்ணா? அதுவா? இதுவா? உயர்திணையா? அஃறிணையா? எப்படிச் சொல்வது கடவுளைக் கண்டவர்கள் உண்டா; கண்டவர்கள் கண்டவாறு காட்டியது உண்டா? காட்டியபடி நாம் கண்டுகொண்டோமா? அப்படி ஒருவர் இருப்பது உண்மைதானென்று நம்பிக்கொண்டோமா? நம்பாமல் சும்மா கடவுள் கடவுளென்று சொல்லிக் கொண்டும் வணங்கிக் கொண்டும் பூசை, அர்ச்சனை செய்து கொண்டும் காலத்தைக் கடத்துகிறோமா? விளங்காமல் வாழ்ந்து காலத்தைக் கடத்துவதுதான் கடவுளோ?

ஐயப்பாடு எழவேண்டும் - சந்தேகம் தோன்ற வேண்டும். விசாரணை இருக்க வேண்டும். தேடல் நடக்கவேண்டும். சரி சந்தேகமாய்த்தான் இருக்கிறது. தேடுவோம் யாரிடம் கேட்பது. எங்கு போவது? எவரிடம் விசாரிப்பது!

நம் கண்ணில் படுபவர்கள் யாருக்கும் சரியாக தெரியாது. சாடையான விளக்கமிருந்தாலும், நமக்குப் புரியும்படி சொல்ல முடியாது. சிவஞானபோதச் சூத்திரமும் சித்தியார் விளக்கமும் நம்மைக் குழப்பிவிடக்கூடும். தோத்திர சாத்திரங்கள் கேட்க நமக்கு நேரமுமில்லை, காலமுமில்லை. பின்னே என்னசெய்யலாம். சும்மா கற்பூரத்தைக் கொளுத்திக் கும்பிட்டுவிட்டு ஓடுவமா? எல்லோரையும்போல செய்து போட்டு போறத்துக்கு நமக்கேன் விசாரணையும் வீண்வம்பும். கடவுள் தன்னை விளங்கிக் கும்பிட்டவருக்கு மட்டுமா கருணை காட்டுகிறார்? சீச்சீ! மனதிலை நெடுக கிடந்து அடிக்கிற அவா எந்நாளும் சாப்பாடும், நித்திரையும், வேலையும், வியாபாரமும், சாமத்தியமும், கலியாணமும், கோடும், கச்சேரியும். செத்தவீடும் அந்திரட்டியும்தானே கண்டமிச்சம். இன்டைக்காவது கடவுளைக் கண்டுகொண்டு போவம் ஒருநாளாவது மனதுக்கு நிம்மதியாய் எல்லாத்தையும் மறந்து போறவழிக்காவது புண்ணியம் கிடைக்க இந்தக் கடவுளைப்பற்றிக் கேட்டுக்கொண்டு போவம், நடவுங்க.

கடவுளென்றால் செலுத்துவது என்பது கருத்து. இந்த உலகத்தை உயிர்களை இயங்கவைப்பது என்று பொருள். எல்லாவற்றையும் கடந்து, எல்லாவற்றுள்ளும் கலந்தும் இருப்பதனாலே கடவுள் என்று சொல்லப்பட்டது. கடவுளை அவரவர் மனநிலைக்கு ஏற்றபடி அப்பனாகவும் கொள்ளலாம். அம்மையாகவும் கொள்ளலாம். அம்மையப்பனாகவும் ஏற்கலாம். அவருக்கு ஊருமில்லை. உருவமுமில்லை. பேருமில்லை. எல்லா உலகமும் அவர் ஊரே. எல்லா உருவும் அவர் உருவமே. எல்லாப் பெயர்களும் அவர் பெயரே. ''எல்லா உலகமும் ஆனாய் நீயே'' ''ஒருநாமம், ஓருருவம் ஒன்றும் இல்லார்க்கு, ஆயிரம் திருநாமம்பாடி நாம் தெற்றேணம் கொட்டாமோ'' என்று கடவுளைக் கண்டு தெளிந்த மாணிக்கவாசக சுவாமிகளின் வாக்குகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடவுள் என்பது உலகத்தைக் கடந்து தனியாய் நிற்பது என்றும் கருத்துக் கொள்ளலாம். இக்கருத்தும் உண்மையே, உலகத்தை நீக்கி தனியாய் நிற்கும் கடவுளைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர் வழிபாட்டிற்கு உரியவருமல்லர். நம்மைவிட்டு பிரிந்தவருடன் நமக்கு கொண்டாட்டமுண்டா? இல்லையே. நம்மோடு கலந்தும் நமக்கு

தன்னைத் தெரிய வைத்தும் குருவோடு சேர்ந்தும் நிற்கின்ற கடவுளைப்பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். கடவுளின் இந்த மூன்று நிலைகளை, மூவித நிலையென பெரியோர் வகுத்தனர். தனித்து நின்று மனம் வாக்குக் கடந்து வழிபாட்டிற்கு உதவா நிலையினரென்றும், இயற்கையை உலகத்தை உடலாகக் கொண்டு தான் உயிராக நிற்கும் நிலையும், விளங்க வைக்கும் குருநாதன் மூலமாக தெரியவரும் நிலையுமே வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உதவக்கூடியதென்று தெளிய வைத்துள்ளார்கள்.

உலகத்தோடு கலந்து நிற்கும் கடவுள் வானமாகவும் மண்ணாகவும் காற்றாகவும் வெளிச்சமாகவும் ஊனாகவும் உயிராகவும் உண்மையாகவும் இன்மையாகவும் கோனாகவும் நின்று இயங்குகின்றான் என்று கூறினார் மணிவாசகர். தன்னைப் பிறருக்கு விளங்க வைக்கும் குருவின் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு கடவுள் குரு மூலமாக நமக்குத் தெரியவருவான். தானே குருவாகித் தன்னைத் தெரிய வைக்கும் நிலைப்பாட்டினையும் எடுப்பான். குருந்த மரநிழலில் குருவாகி இருந்த நிலைப்பாடு நமக்குத் தெரிந்ததே.

''குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்'' என்பது திருமந்திரம். குரு என்றால் யார்? சுயநலமில்லாது பொதுநலம் விரும்பி கடவுளைத் தவிரவேறொன்றும் விளங்கப்பெறாத உள்ளம் உடையவரே குரு. குரு ஆணாகவும் இருக்கலாம். பெண்ணாகவும் இருக்கலாம். குருவின் வழியில் கடவுளின் அருட்செயல்கள் நிகழவும் கூடும். குருநாதர் செயலெல்லாம் கடவுளின் அருட்செயல்களே. குருவின் கட்டளையும் ஆண்டவன் கட்டளையே. குருநாதன் நாம் காண்பதைக் காட்டி அதனுள் விளங்கும் கடவுளைக் காட்டுவான். எண்ணத்துக்கு எட்டாத ஒன்றை எண்ணத்திற்கு - பார்வைக்கு எட்டும் ஒன்றைக் கொண்டே புரியவைப்பான்.

கடவுளைப்பற்றி விளக்கம் கூறிய திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் தனது அதிகாரத்தில் காணப்பட்ட உலகத்துள் காணப்படாத கடவுளைக் காட்டுகிறார். கண்டது கொண்டு காணாதது காட்டலும், உள்ளதை வைத்து உறைந்ததை உணரச் செய்வதும் குருவின் வேலை. ''தேடித்தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்'' என்று நம்மையும் உள்ளத்தில் கடவுளைத் தேடச் சொல்கிறார் ஒரு குரு.

கடவுளைத் தேடுவதும் காண்பதும் வழிபடுவதும் நமக்கு வேண்டியது கேட்பதும் போதுமானதா? கடவுள் சிரிப்பார். நமது சுயநலத்தை அறியாமையை எண்ணி அட்டகாசமாய்ச் சிரிப்பார். அதுதான் புயலாய், சூறாவளியாய் நமக்குக் கேட்கும். கடவுளின் இப்பெருஞ் சிரிப்பு நமக்குச் சில வேளை விளங்குவதுமில்லை. கடவுளை விளங்கிக்கொள்ள கடவுளின் அசரீரியும், அசைவும், அட்டகாசச் சிரிப்பும் ஏன்என்று நமக்குப்புரிய வேண்டும்.

கடவுளைக் காண்பது உணர்வது மட்டுமல்ல கடவுளோடு கதைக்கவும் நமக்குத் தீராத விருப்பம் அதற்குநாம் என்ன செய்ய வேண்டும். நம் ஊர்க் கவிஞர் மு. பொன்னம்பலம் கவிதை மூலம் ஓர் ஆலோசனை சொல்கிறார். அதனையும் கேட்போம்.

கடவுளோடு கதைக்கலாம் வாரும்
சந்தை இரைச்சலில சங்கீதம் கேட்பதில்லை,
ஆனால் இனிமேல் கடவுளோடு கொஞ்சம்
கதைக்கலாம் வாரும்.
சாப்பாடு முடிந்து சிறிது சாய்மனையில்
சரியப் போகிறீரா? நல்லது
அப்போ இப்படிக் கொஞ்சம் கணக்கெடுத்துப்பாரும்.

இன்றைக்கு நான் எவ்வளவு தூரம்
வீண் பெருமை இல்லாமல்,
அடுத்தவனை அநாவசியமாகத் தூற்றுமல்
கட்சியின் பெயரில் என் சொந்த வயிற்றெரிச்சலை
பிறரில் வஞ்சம் தீர்க்காமல்
பொய்யின்றி, களவின்றி, போலிநடிப்பின்றி
பதவி, அந்தஸ்துக்களால் உலைக்கப்படாமல்
உண்மைப் பொதுமைக்கு விட்டுக்கொடுப்பவனுய்
நடந்திருக்கிறேனென்று,
உனது மனச்சாட்சியைக் கேளும்
மனச்சாட்சியின் நிமிர்வுதான் கடவுளின்
ஆரம்பச் செருமல்.
உனது கேள்வியால் உனது மனம் சுருங்குகிறதா?
சுருங்கினுல் அது கடவுளைச் சந்திக்க விரும்பாத
உனது தனிநலக் குணத்தின் சுருக்கம்
தொடர்ந்து நாளும் இப்படிக் கேளும்.
மனத்தின் சுருக்கம் குறையக் குறைய
கடவுளின் குரல் நெருங்கிக் கொண்டேயிருக்கும்
ஒருநாள் உனதுமனம் எந்தச் சுருக்கமும் அற்று
விரியும் போது, கடவுள் உன்னோடு
நேரடியாய் உரையாடுவர்!
ஏன், கடைசியில் உன்குரலே கடவுள் குரலாயிருக்கும்.''

**நல்ல யோசனை. முயன்று பார்ப்போமே.**

புதிய சித்திரத்தேரில் புதுப்பொலிவு கொண்டு புன்முறுவல் பூத்து புங்குடு தீவை இன்ப அன்புடன் மகிழ்ந்து வாழவைக்க கருணைமிகுகாட்சியுடன் இராஜராஜேஸ்வரி ஆரோகணித்து எழுந்தருளியமை, எம்மவர் முயற்சியின் தவப்பயன் அல்லவா? வாழ்த்துவோம் அம்பிகையை வணங்கி வாழவைத்து வாழவும் மகிழவைத்து மகிழவும் வரமருள வேண்டுவோம்.

''கடவுள் இல்லை என்றே, கடவுளை முட்டாள் என்றே, கடவுளை நிந்தித்தோ ஒருவன் எவ்வளவு தூற்றினுலும் அதை அவர் லட்சியம் செய்த தில்லை. ஆனுல் கடவுள் பக்தனுக்கு ஒருவன் தீங்கு நினைந்தால் அவர் பொறுக்கமாட்டார். சூரியனின் உஷ்ணத்தைத் தாங்கமுடியும். ஆனுல் சூரியனின் வெப்பத்தைத் தாங்கும் பொடிமணலின் உஷ்ணத்தை நாம் கால்களால் தாங்கமுடியாது. அதுபோல, பிரகலாதனுக்கு இழைத்த கொடுமையைத் தாங்கமுடியாமல்தான் கடவுள் நரசிம்மாவதாரம் எடுத்தார்.''

— கிருபானந்தவாரியார் வாக்கு

# பனங் கூடலுக்குள் சைவம் வளர்கிறது

சரவணமுத்து சுவாமிகள்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெருசத்துள் கோயிலாக் கொள்வனே!

தெட்சண கைலாசம் எனப் பேசப் படுகின்ற இலங்கையின் வடபால் சைவமும் தமிழும் தழைத் தினிதோங்கும் யாழ்ப்பாண நன்னகருக்கு அணித்தாக கடலாற் சூழப்பட்ட ஓர் தீவகம் உண்டு. இதனை பொன்கொடு தீவு - புங்குடுதீவு என்று வழங்குவார்கள்.

இங்குதான் சரித்திரப் பிரசித்தி பெற்ற காவியமாகிய சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய கண்ணகி சிலை அற்புதமான வகையில் கடலில் மிதந்து வந்து கரையேறி கோயில் கொண்ட இடம் அமைந்துள்ளது.

இந்தக் கோயில் பலகாலம் கண்ணகை வழிபாடுடன் இருந்து பின்னர் நடந்த கும்பாபிஷேகத்தின் போது இராச இராசேஸ்வரி அம்பாளுக்கும் இடம் அமைத்து தற்போது பிரதான மூர்த்தியாக இராச இராசேஸ்வரி அம்பாள் அமர்ந்து—

தனம் தரும், கல்வி தரும், ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும். நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும். நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே, என்றபடி தன்னை வழிபடும் மெய்யன்பர்களுக்கு அள்ளி அள்ளி சகல செல்வங்களையும் அம்பாள் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். இந்த இடத்திலேதான் 1954ம் ஆண்டு ஊர் மெச்ச உலகம் மெச்ச சிலப்பதிகார விழா நடந்தது. அப்போது வருகை தந்த இந்திய பேரறிஞர்களாகிய கி. வா. ஜெகந்நாதன், சிவஞான கிராமணியார், முத்து சிவம், அ. ச. ஞானசம்பந்தன் முதலாம் பேரறிஞர்கள் புங்குடுதீவு மக்களின் சமயப் பற்றையும் தமிழ்ப் பற்றையும் மெச்சினதுடன் பனங்கூடலுக்குள் சைவத்தைக்கண்டோம் எனப் பாராட்டினார்கள். அதேகண்ணகை அம்மன் என வழங்கும் இராச இராசேஸ்வரி அம்பாளுக்கு விசேடமாக இராச கோபுரம் சித்திரத் தேர், தேர் கொட்டகை முதலான மிக முக்கியமான திருப்பணி நிறைவெய்தி கடந்த 27-6-79ம் திகதி கும்பாபிஷேகம் அதிசிறப்பாக நடைபெற்றதை தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகத்தை தொடர்ந்து கொடி ஏற்றி உற்சவம் நடந்து வருகிறது. எதிர்வரும் 27-7-79 வெள்ளிக்கிழமை அம்பாளுக்குகந்த ஆடிப் பூரத்தன்று சித்திரத்தேர் என்கின்ற மகா ரதத்தில் அம்பாள் எழுந்தருளி மக்களிடத்துள்ள மும்மலங்களை சங்காரம் செய்து நல்லருளை நல்கும், தேர் உற்சவம் நடக்க இருப்பது சைவமக்கள் விசேடமாக புங்குடுதீவு மக்கள் செய்த பெரும் தவமென்றே சொல்ல வேண்டும். விசேடமாக சித்திரத் தேர் அமைப்பதென்பதும் அதற்கு முதலீடு செய்து ஈடுபடுவதென்பதும் எல்லோருக்கும் வாய்க்கும் ஒரு பேறல்ல பலகோடி புண்ணியம் செய்தவர்களுக்கே, அது கைகூடும் சித்திரத் தேர் குறுகிய காலத்துள் அமைப்பதற்கு முன் நின்ற ஸ்தபதியாருக்கும் அவரை ஊக்குவித்தும் பொருள் உதவியும் செய்துள்ள பெருமக்கள் உண்மையில் தவம் செய்தவர்கள் தவமும் தவம் உடையார்க்கேயாகும். சித்திரத் தேரில் அம்பாள்

இவர்ந்து அருள் பாலிக்கும் பெரும்பேறு பெற்ற நாமும் தவம் செய்தவர்களே. கோபுரம், தேர், தேர் கொட்டகை ஆகியன நிறைவேறவும், கும்பாபிஷேகம் நிறைவேறவும் தங்கள் உடல் பொருள் ஆவி என்கின்ற மூன்றையும் அர்ப்பணித்து தொண்டு செய்த நன் மக்களை வாயார வாழ்த்துகின்றேன்.

இவர்களின் தொண்டு மேன்மேலும் சிறக்கவும் இன்னும் இதுபோன்ற பல நற்பணிகளில் அவர்கள் ஈடுபட்டு உயிரினிமினிய சைவமும், தமிழும். தழைக்க அவர்கள் பாடுபட வேண்டுமென்றும். மனமார வாழ்த்தி அவர்களுக்கு எல்லாம் வல்ல கேதீஸ்வரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.


## ஆன்மஞானத்தின் உறைவிடம் நமது நாடுதான்

ஞானம் பிறநாடுகளிலே பரவுதற்குமுன் அதற்கு உறைவிடமாய் இருந்தது இத்தேசமே; இங்கன்றோ இமயமலை எப்பொழுதும் பனியால் மூடப்பட்டதாகி விண்ணுலகத்து இரகசியங்களை அறியப்புகுவதுபோல் படிப்படியாய் உயர்ந்து ஆகாயத்தை அளாவுகின்றது. இங்கன்றோ ஞானிகளிற் சிறந்தவர் வாழ்ந்தனர். மனிதன் எத்தகையவன், பிரபஞ்சம் எத்தகையது என்ற விசாரங்கள் முதன்முதல் நிகழ்ந்தது இங்கு அல்லவா? ஆன்மா அழிவற்றது. நியந்தாவாகிய கடவுள் ஒருவர் உளர். ஜகத்திலும் ஜீவனிலும் நிறைந்த கடவுள் அவரே என்ற முடிவுகள் இங்குத்தானே முதன்முதலிற் செய்யப்பட்டன. மதமும் தத்துவ ஆராய்ச்சியும் எட்டக்கூடிய தூரம்வரை எட்டினதும் இங்குதானே. இங்கிருந்தன்றோ தத்துவஞானம் கடலினின்றும் எழும் அலைகளைப்போல் அந்நிய நாடுகளுக்கும் பரவிற்று. இனிமேலும் இங்கிருந்துதான் அந்த ஞானம் தற்காலத்திலே மெலிந்து கிடக்கும் தேசங்களுக்குச் சென்று, அத்தேசத்தவர்க்கு வலிமை ஊட்ட வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

உ

# கலியுக அற்புதம்



**திரு. தி. சி. சண்முகலிங்கம்**

பொதுச்செயலாளர்

இணுவில் இந்துமகாசபை

**எ**ங்கும் நிறைந்து எல்லாமாயுள்ள பரம்பொருளை திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து பூசித்து உய்தி பெறுவது சைவத்தின் உயர்நிலையாகும். மனிதனின் வாழ்வில் கிடைத்தற்கரியபேறு கும்பாபிஷேகக் காட்சி காணுதல். புங்குடுதீவு அருள்மிகு அன்னை இராஜராஜேஸ்வரி அம்பாளின் கும்பாபிஷேகத்திற்கு வருமாறு அன்பர் (திரு.மு.கனகசபாபதி அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்) அவர்களின் அழைப்புக் கிடைத்தது. அவனருளாலே தான் அவன் தாள் வணங்கமுடியும் என்பது பேருண்மை. ''மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகாணுதல்'' என்னும் சம்பந்தப் பெருமானின் அருள்மொழிப்படி எங்கெங்கு கும்பாபிஷேகம், தேர்த் திருவிழா நடந்தாலும் அங்கெல்லாம் சென்று தரிசனம் காணத்தவருத மதியண்ணர் (திரு. செ. மதியாபரணம் உரிமையாளர் யாழ். வளர்மதி புடவை மாளிகை) தனது காரில் அழைத்துச் சென்ருர். வழிநெடுக அடியார் திருக்கூட்டம் அதிகாலை 3-00 மணிக்கு பஸ்வண்டி கிடைக்காத அன்பர்கள் கால்நடையாகவே சாரிசாரியாக அம்பாள் திருக்கோயிலை நோக்கி அரோகரா சொல்லிய வண்ணம் செல்வதை வேலணையில் கண்டோம்.

காலை 5-00 மணிக்கே யாகபூசைகள் ஆரம்பமாயின. வெளி வீதியில் ஈசான மூலையில் அமைக்கப்பட்ட அற்புதமான பந்தலில் 33, 9, 5 குண்டங்களில் யாகங்கள் நடைபெற்றன. உள்வீதியில் விநாயகர் சந்நிதி தொடக்கம் இரதாரோகண மண்டபம்வரை யாகப்பந்தர் அமைத்து, ஒவ்வொருகுண்டம் வைத்து யாகங்கள் நடந்தன. நூற்றுக்கதிகமான குருக்கள் மார் நின்று கும்பாபிஷேகம் செய்த காட்சி அற்புதம்.

ஆலயமுன்றலிலே நிற்கும்போது அக்காட்சி ஆனந்தபரவசத்தையூட்டியது. அலைகடல் ஓரத்திலே திருச்செந்தூர் போன்ற அமைப்பிலே அன்னை கோயில் கொண்டிருக்கும் அற்புதத்தை அன்பர்கள் தம்முள் பேசிப் பேசி வியந்ததைக் கேட்கக்கூடியதாயிருந்தது.

அன்னையின் அருட்செயல்களைக் கேட்டு ஆனந்தித்தோம். அற்புதங்கள் புராணங்களில்தானே உள. இன்று எங்கு நடைபெறுகின்றன என்று வினவுவர்க்குத் தாராளமான விடைகளை இங்கு பெறலாம்.

மகாமண்டபத்திற்குத் தேக்குமரம், தேர் இழுப்பதற்குத் தேர்வடம், விளக்கேற்றுவதற்கு தேங்காயெண்ணெய்ப் பீப்பா திருவாடுதண்டுகள் இவையெல்லாம் அன்னையின் அருளலை வீசும் கடல் வழிவந்து கிடைத்தவை என்பதை அறியும்போது தெய்வீகச் செயலுக்கு வேறென்ன சான்று வேண்டும்.

தேர்க் கொட்டகையில் முக்காற் பங்கு நிறைவேறிய நிலையில் புதிய சித்திரத்தேர் உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆறுமுகம் சிற்பாலய அதிபன், ''சிற்பரத வித்தகன்'' திரு. ஆ. ஜீவரட்ணத்தின் கை வண்ணத்தில் உருப்பெறும் 'பூசாந்தர முகவத்திரத் தேர் ஈழத்தில் தனித்துவமான ஒரு அமைப்புடன் திகழ்வதைக் காணலாம். இதுவரையில் ஐம்பதுக்கும் அதிகமான தேர்களைச் செய்துள்ள இவரது படைப்பில் இது சிகாமணியாய்த் திகழப்போகின்றது எனும் குறிப்புத் தெரிகிறது. அற்புதம் நிறைந்த அருள்மிகு இராஜராஜேஸ்வரி அன்னையின் அருட்செயல் இதிலும் விளங்குகிறது. இந்தியக் கலைஞர்களையே விஞ்சும் பாணியில் இவரது முத்திரை தெரிகிறது.

ஏக காலத்தில் மூலஸ்தானம், பரிவார மூர்த்திகள், இராசகோபுரம் ஆகிய யாவற்றுக்கும் கும்பாபிஷேகம் செய்து சித்திரத் தேரும், வெள்ளோட்டத்திற்குத் தயாராய் இருப்பதைப் பார்த்தால் இது தெய்வீகச் செயலே என்பதை நம்பாதார் யார் இருக்கமுடியும்,

பணத்திற்கோ, பொருளுக்கோ, உடல் உழைப்புக்கோ பஞ்சமேயில்லை. காரணம் ''உருவேறத் திருவேறும்'' என்பதற்கேற்ப அடியார்கள் கிரியாநெறி தவறாது சகல கருமங்களையும் செய்து பூரண நம்பிக்கையுடன் வணங்குகின்றார்கள். அன்னை அள்ளியள்ளிக் கொடுக்கின்றாள். மீண்டும் அன்பர்கள் நன்றிக்கடன் செலுத்துகின்றார்கள். இல்லையென்ற சொல்லுக்கு இங்கு இடமில்லையென்பதை தரிசனம் செய்யும் எவரும் காணமுடியும். இது கலியுக அதிசயம் கண்டவர் பாக்கியசாலிகள்.

ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டின் சேர்க்கையானது ஒரு கடிகாரத்தில் மணிக்கொருதரம் மணியைக் காட்டும் முள்ளும நிமிஷத்தைக் காட்டும் முள்ளும் சேர்வதை ஒக்கும், அவைகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. ஒன்றன்மீது மற்றொன்று சார்ந்துமுள்ளது. சாதாரணமாக அவை தனித்திருப்பினும் தகுதியான சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போதெல்லாம். ஒன்று சேரும்.

பூனையானது தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கும்போது அக்குட்டிகளுக்குத் தீங்குண்டாவதில்லை. ஆனால் அது ஓர் எலியை அப்படிப் பிடிக்குமானால் அவ்வெலி உடனே இறக்கின்றது. இதைப் போலவே மாயையானது மற்றவர்களை வருத்துவதாயினும் பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

உ

# கனவிலே தோன்றும் அதிசய சக்தி



பிராந்திய தபால், தந்தி பொறியியலாளர்

கரவெட்டி

## திரு. செ. தெய்வசிகாமணி அவர்கள்

அன்றொருநாள் நண்பர் திரு. மயில் வாகனம் மூலமாக புங்குடுதீவு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தையும், அங்கே எழுந்தருளி இருக்கும் அருள்மிகு அம்பாளையும் தரிசிக்கும் பெரும்பேறு பெற்றேன். அன்னாரின் அரும்பெரும் முயற்சியால் உருவான உள்ளும் புறமும் புதிதாய் அமைக்கப்பெற்ற ஐந்து நிலை இராஜ கோபுரத்தையும், அங்கே அமைக்கப்படும் அழகிய மண்டபங்களையும் காலத்தால் அழியாத இந்துக்களின் புராதன கலையம்சங்களை பொறித்து, செதுக்கி புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சித்திரத் தேரினையும் கண்ணாரக் கண்டேன்– வியப்புற்றேன் – களிப்புற்றேன். என்னே! இவ்வம்பாளின் கிருபை...... கனவிலே தோன்றி தன் அடியார்களையும் பக்தர்களையும் காணிக்கை கொடுக்கச் செய்யும் அம்பாளின் அதிசய சக்தியைக்கண்டு எதை எப்படி...... சொல்வதென ஒரு நிலை!

யாழ்ப்பாணத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத, குன்றாத வளமுடைய வணிகப் பெருமக்களும், இசைவல்லுனர்களும், கலைச்செல்வம் படைத்தவர்களும், இப்பகுதியில் வளமாக வாழ்வது அருள் மிகு அம்பாளின் கிருபையேயென மனமார நம்புகின்றேன். அன்போடு அதிசயங்களும் அருளும் படைக்கின்ற தாயவளின் கிருபை அவர்களுக்கும் நம்யாவருக்கும் மேலும் கிடைக்கவேண்டுமென அருள் மிகு அம்பாளின் தாள் வேண்டி, பிரார்த்தித்து – பணிந்து போற்றுகின்றேன்.

# அற்புதங்கள் நிறைந்த
# கண்ணகை அம்மன் வரலாறு

சப்த தீவுகளில் ஒன்றுன புங்குடு தீவை சுவர்ணதாத்திரி, பொன்கொடுதீவு, பூம்புகார், திருப்பூங்குடி, பொன்கைநகர் என்னும் பல புனை பெயர்களால் அழைப்பர்.

புங்குடுதீவின் தென்புறத்திலே இந்து சமுத்திரக் கரையோரத்தில் கோயில் கொண்டு நினைத்த வரம் அருளும் கண்ணகை அம்மன் என விளங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோயில் நானூறு ஆண்டுக்கு முற்பட்ட பழைமையுடையது. அதன் வரலாறு புதுமை நிறைந்தது. அந் நாளில் இங்கு வாழ்ந்த சைவ வேளாண்குல முதல்வன் ஒருவன் பெரும் மாட்டு மந்தைகளுக்கும் எருமைகளுக்கும் உரிமையுடையவனுக விளங்கினுன். காட்டுக்கு மேயச் சென்று வரும் எருமைக்கூட்டம் ஒரு நாள் திரும்பி வரவில்லை. ஏவலாளர் பல திசைகளிலும் தேடி கடைசியாகச் சமுத்திரக்கரையில் எருமைகள் நிற்பதைக் கண்டுகொண்டனர். பென்னம் பெரிய பேழையொன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டு எருமைகள் நிற்பதையுணர்ந்து ஆச்சரியமுற்றனர்.

அதிசயமும் ஆச்சரியமும் அடைந்தவர்கள் பெட்டியைக் கரைக்கு தூக்கி வந்து பாறையின் மேல்வைத்து திறந்து பார்க்க முயற்சித்தனர். ஆனுல் முடியவில்லை. எனவே மீண்டும் அதைச் சுமந்து வந்து சற்றுத் தூரத்தே நின்ற இத்தி மரத்தடியில் வைத்துவிட்டு இளைப்பாறி மீண்டும் சுமந்துகொண்டு வந்தபொழுது முன்னரிலும் அதிக பாரமாகத் தோன்றவே சுமக்கமுடியாமல் அங்குநின்ற பூவரச மரத்தடியில் இறக்கிவைத்து சிறிது இளைப்பாறினுர்கள். மீண்டும் பெட்டியைத் தூக்கமுயற்சித்தபோது அசைக்க முடியாமற் போகவே மற்றும் அயற் கிராம மக்களிற் சிலரை அழைத்து வந்து மிகுந்த பிரயாசையுடன் அப்பெட்டியைத் திறந்து பார்த்தார்கள்.

அதனுள்ளே பெண் கற்சிலை ஒன்றும் சதங்கை போன்ற ஆபரணமும் சிலம்புகள் சிலவும் தாமிரத்தாலாகிய ஒரு பெண் முகமும் சிறு காளி அம்மன் சிலை ஒன்றும் இருக்கக்கண்டு அனைவரும் அதிசயமும் பயமும் அடைந்தனர். அவ்வேளையில் அங்கு நின்ற பெண் ஒருவர் மீது தெய்வம் உரு ஏறித் தான் கண்ணகி ஆகிய பத்தினித் தெய்வம் என்றும், தன்னை ஆதரித்து வழிபாடு செய்வோர் அஷ்ட ஐசுவரியங்களையும் வேண்டிய வரங்களையும் பெறுவர் என்றும் கூறியது.

அதைக் கேட்ட மக்கள் அவ்விடத்திலேயே சிறு குடில்அமைத்து அன்றுமுதல் கண்ணகி அம்மன் எனப் பத்தித் தெய்வத்தை வணங்கிவந்தனர். பெட்டிக்குள் இருந்த கண்ணகி விக்கிரகமே இன்று கண்ணகி ஆலயத்தில் தென்முகமாகச் சமுத்திரத்தை நோக்கி எழுந்தருளி அடியார்களுக்கு அஷ்ட ஐசுவரியங்களையும் வழங்கிக்கொண்டிருக்கிறது. பெட்டிக்குள் இருந்த பத்திரகாளி விக்கிரகமே பத்திரகாளி ஆலயத்தில் எழுந்தருளி தன்னை நாடிவரும் அடியார்களின் குறைகளைத் தீர்த்துக்கொண்டிருக்கிறது. இருந்த மற்றைய பொருள்கள் பழைமையை நினைவூட்டும் வரலாற்றுப் பொருள்களாகப் பேணிக்காக் கப்படுகின்றன.

முதன்முதல் பெட்டியைக் கண்ட இடமே மாதேவர்முனை. அங்கு மாதேவர் கோவிலும் இரண்டாம்முறை பெட்டியை வைத்த இடத்தில் நாச்சிமார் ஆலயமும் சிறந்த ஆலயங்களாக அடியார்கள் வழிபட்டு வருகிருர்கள்.

கடைசியாகப் பெட்டியைத் திறந்து பார்த்த இடத்தில் நின்ற பூவரசமரம்

ஸ்தல விருட்சமாகப் போற்றிப் பாது காத்து ஆதி கண்ணகி பீடம் எனப் பெய ரிட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்தது. அக்காலத்திலிருந்தே இத்தலவிருட்சம் அழியாமல் பெரிய விருட்சமாக அடியார் களுக்கு நிழலும் கொடுத்து வருகிறது.

ஆதியில் பூவரச மரத்தின் கீழும் பின் சிறு கொட்டிலிலும் வைத்துப் பொங்கல் பூஜை முதலியன செய்து வழிபட்டு வந்த மக்கள, கண்ணகை அம்மனுக்கு ஓர் ஆல யம் அமைக்க எண்ணி சுண்ணும்புக் கட் டடத்திஞல் ஆலயத்தை அமைத்து பனே ஓலேயிஞல் வேய்து கண்ணகை அம்மனே வைத்து வழிபட்டு வந்தனர்.

மீண்டும் இவ்வாலயத்தை நல்லமுறை யில் அமைக்க எண்ணிய பொதுமக்கள் அக்காலத்தில் 1895 ஆம் ஆண்டளவில் உடையாராக இருந்த திரு. இராமலிங்கம் கதிரவேலுவைத் தலேவராகக் கொண்டு கோவிலுக்குத் தேவையான மரம் முத லான பொருள்களேயும் நிதியையும் பொது மக்களிடமிருந்து சேகரித்து கோவிலோடு சேர்ந்த மண்டபத்தினேயும், மடப்பள்ளி யையும் திருமஞ்சனக் கிணறு என்பவற் றையும் திருப்பணி செய்தார்கள்.

கடற்ருெழில் செய்யும் அன்பர்களேக் கொண்டு கோவிலுக்கும் மண்டபத்துக் கும் ஓடு போடுவித்தார்கள். பிற்காலத் தில் சுற்றுமதில், கொடிமரம் ஆகிய திருப்பணிகளேயும், கடற்ருெழில் செய் யும் அன்பர்களே செய்தார்கள். 6 ஆம் திருவிழா ஆகிய கப்பல் திருவிழா உப யம் இன்று அவர்கள் உபயமாகவே நடை பெற்று வருகிறது.

பிற்காலத்தில் மடப்பள்ளி, பிள்ளே யார் ஆலயம், சுப்பிரமணியர் ஆலயம் பைரவர் ஆலயம், பத்திரகாளி ஆலயம், அசையாணி களஞ்சிய அறை, வசந்த மண் டபம், யாகசாலே ஆகிய திருப்பணிகளே கிராமத்தில் உள்ள ஒவ்வொரு பகுதி யினரும் அவர்களோடு குடுப்பத் தொடர் புடையவர்களும் நிறைவேற்றினர். இவ் வாறே ஒவ்வொரு திருப்பணியும் மக்க ளால் செய்யப்பட்டன.

இராமலிங்கம் கதிரவேலு, கதிர வேலு ஆறுமுகம், கதிரவேலு விசுவலிங் கம், கு. இரத்தினசபாபதிக் குருக்கள், க. மு. சின்னத்துரை, இ. க. சுந்தையா மு. தில்லேயம்பலம், கா. நாகலிங்கம் ஆகியோர் தங்கள் காலகட்டங்களில் நிர் வாக உறுப்பினர்களாக இருந்து அருந் தொண்டாற்றியதை என்றும் நினேவு கூருகின்ருேம்.

ஆகம விதிப்படி ஆலயம் அமைக்கப் பட்ட பின்னர், 1931 ஆம் ஆண்டில் சிவஸ்ரீ சோமாஸ்கந்தகுருக்கள் மூலாலயத் தில் இராஜ இராஜேஸ்வரி அம்பாளேயும் தென்திசையாக சமுத்திரத்தை நோக்கி கண்ணகி ஆலயத்தில் கண்ணகை அம் பாளேயும் பிரதிட்டை செய்து கும்பாபி ஷேகம் செய்து வைத்தார்கள். அதன்பின் 1944 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இப்பழம் பெருங்கோயில் சுண்ணும் புக் கட்டடமாக இருந்தமையால் சிலம் அடைந்திருப்பது அடியார்களின் மனத் தை உறுத்தியது. முன் இருந்த நிர்வாகி கள் இக் கோவிலே வைரக்கல் கொண்டு திருப்பணி செய்ய வேண்டும் என்று விரும்பிய கனவு நனவாகவில்லே.

சிலவருடங்கள் கழிந்து செல்வந்தரும் கொழும்பில் பிரபல வர்த்தகரும் ஆகிய அமரர் திரு. மு. முத்தையாபிள்ளே 1957 ஆம் ஆண்டில் தர்மகர்த்தாக்களில் ஒரு வராக ஆலய பரிபாலன சபையால் தெரிவு செய்யப்பட்ட பின்னர், இக் கோவிலேப் புதுக்குவதற்குரிய பொறுப் பினேத் ஏற்கத் தாமே முன்வந்தார், சுண் ணும்புக் கட்டடமாக இருந்த முழுக் கோவிலேயும் இடித்து மூலஸ்தானம் முதல் சபா மண்டபம் வரையிலுள்ள எல்லாத் திருப்பணிகளேயும் பல லட்சம் ரூபா செலவு செய்து நிறைவேற்றி வைத்தார்.

மற்றும் மணிக்கோபுரம், அசையா மணி, மடப்பள்ளி, காரியாலயம், களஞ் சியம், பொதி அறை, குருக்கள் அறை, பைரவர் கோவில், யாகசாலே, வாகன சாலே, நவக்கிரக ஆலயம், நடேசர் ஆல

யம் ஆகிய திருப்பணிகளை மற்றும் பல அன்பர்கள் முன்வந்து செய்தார்கள். இத்துடன் திரு. மு. முத்தையாபிள்ளை அவர்களின் முயற்சியால் 1964 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ப. கதிரவேலு நா. சி செல்லையா ஆகியோரும் கோவில் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்தார்கள்.

அதன்பின்னர் அம்பாள் ஆலயம் பல வழிகளிலும் முன்னேற்றம் அடையலாயிற்று. புதிய பஞ்சாயம் அமைப்பதற்குத் தொண்டர்கள் முயன்றனர். வெற்றியும் கண்டனர். இன்று இராஜ கோபுரம் வானளாவி நிற்பதன் காரணம் புதிய பஞ்சாயத்தினரின் தியாகசிந்தனையென்றே கூறலாம். சிறப்பாக "திருப்பணி வேந்தன்" திரு. நா. க. மயில்வாகனம் அவர்களும் சிவநெறிச் செல்வர் திரு கு. செல்லையா அவர்களும் பஞ்சாயத்தில் முன்னின்றுழைக்கின்றனர். அம்பிகை தந்த செல்வம் அரும்பணிக்குரியது. என்றே அல்லும் பகலும் செலவு செய்கின்றனர். பெருநிதிக்கிழார் அமரர் மு. முத்தையா பிள்ளையின் மக்களும் ஆலயப் பணியில் பேரவாக் கொண்டுள்ளனர். இன்னும் இன்று அம்பாளின் அருளால் அயராது உழைத்து முன்னேறும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் புரியும் ஆலயப்பணியை அளவிடமுடியாது. தேர்த் திருப்பணிக் குழுவில் முன்னின்று உழைக்கும் அன்பர்கள் பணி அளவிடற்கரிய பெரும்பணி வயோதிப வேளையிலும் சிவநெறிக்காவலர் திரு. சி. முத்துக்குமாரு அவர்கள் புரியும் பணியை என்னென்று வியப்போம். அவருடன் அன்பர் திரு. த. கிருஷ்ணசாமியும், நண்பர் ஆசிரியர் அ. க. கணபதியா அவர்களும் இன்னும் பலரும் இடையறாது முயன்றதனால் எழுந்து நிற்கிறது. புத்தம் புதிய வண்ணச் சித்திர அழகுத் தேர். தேர் எழுந்தது! தேரினைக் காக்கும் தேர் முட்டியும் எழுந்து விட்டது! அன்புக்குரிய இளைஞர் திரு. க. தியாகராஜா அவர்கள் தன்னந் தனியே தேர் முட்டித் திருப்பணியைச் செய்து முடித்திருக்கின்றார். அருமைத் தம்பி தியாகராஜன் பெயருக்கு ஏற்ப தியாகராஜன் ஆகிவிட்டார்.

பழைய பத்திரகாளி கோவில் புதிய உருவப் பொலிவும் பெற்று எழுந்து நிற்கிறது. நாடோறும் அம்பாள் கோவில் வழிபாடும் பேறுபெற்ற பேரன்பர் திரு. க. செல்லத்தம்பி அவர்களும் இன்னும் சில அன்பர்களும் மனமகிழ்வுடன் பத்திரகாளி கோவில் அமைத்துவிட்டனர். இன்னும் அற்புதமான திருப்பணிகள் ஆருக்கும் தெரியாமல் அம்பிகை செய்விக்கின்றாள். அம்பிகை ஆலயத்தைக் காணக் கண்கோடி வேண்டும். அம்பாள் ஆலயத்தைப் பேணி வளர்த்த பெருமகனார் இரத்தின ஐயர் அவர்கள் இன்றிருந்தால் எத்தனை மகிழ்ச்சியடைந்திருப்பார். இன்று அவர்களின் வழித்தோன்றல் சிவஸ்ரீ ப. கணேசராசக் குருக்கள் பிரதம குருவாக இருந்து ஆலய வளர்ச்சியில் முன்னின்று உழைத்து வருகிறார்.

பண்டை நாளில் முடிமன்னர் கோவில் அமைத்தனர். கோபுரம் ஆக்கினர். தேரும் கட்டினர், திருவிழாச் செய்தனர். இன்று பொதுமக்கள் மன்னர் புரிந்த பணியை மகிழ்வுடன் செய்கின்றனர்.

அம்பாள் ஆலயத்தின் திருப்பணிகள் ஓரளவு நிறைவு பெற்றிருந்த போதிலும் முக்கிய திருப்பணிகளான சுற்று வீதிக் கொட்டகை, மின்சார வெளிச்சம், ராஜ கோபுரம், சித்திரத் தேர் ஆகிய திருப்பணிகள் அரைகுறையில் இருந்தன. இந்நிலையில் கொழும்பு வாழ் பெருமக்களின் மனத்தில் இத் திருப்பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்றஆவல் எழுந்தது.

1970 ஆம் ஆண்டில், கொழும்பு வாழ் அன்பர்கள் நா. க. மயில்வாகனம் திரு. சி. கு. செல்லையா ஆகியோர் தர்மகர்த்தாக்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களுடன் ஏற்கனவே தர்மகர்த்தாவாகத்தெரிவு செய்யப்பட்ட திரு. மு. இராமச்சந்திரனும் இணைந்து கொழும்பு வாழ் பெருமக்களின் ஆதரவைத் திரட்டி திருப்பணிகளைச்செய்ய முன்வந்தனர்.

அவர்களுடைய பெரு முயற்சியினாலும் கொழும்பு மக்களின் ஆதரவினாலும் சுற்றுக் கொட்டகைத் திருப்பணி நிறை

வேறியது. சிமெந்துத் தளம் அமைக்கும் திருப்பணியும் நிறைவேறியது. மின்சார வெளிச்சம் போடும் திருப்பணியும் நிறை வேற்றப்பட்டது.

1957 ஆம் ஆண்டு ராஜகோபுரத் திருப்பணி இயக்குநர்களாக திரு. நா. க. மயில்வாகனமும், திரு. சி. கு. செல்லையா வும், செயற்பட்டு திரு. நாகநாதர் சுந்தை யாவினால் ராஜகோபுரத்திற்கு அத்திவா ரம் இடப்பட்டது.

ராஜகோபுரத் திருப்பணி பொதுமக் களின் அயராத பேருதவியினால் 1979 ஆம் ஆண்டில் நிறைவேறியது.

சித்திரத் தேர்த் திருப்பணிச் சபை நிறுவப்பட்டு அதன் இயக்குநராகத் திரு. சி. முத்துக்குமாருவும் அவர் மைந்தன் திரு. மு. கனகசபாபதியும் திரு. த. கிருஷ் ணசாமி, திரு. அ. க. கண்ணையா திரு. ஆ. துரைச்சாமி திரு. க. தியாகராஜா வும் செயற்பட்டு கொழும்பிலும், அகில இலங்கையிலும் பரந்து வாழும் அன்பர் களின் பேராதரவினால் சித்திரத்தேர் ரதா ரோகண மண்டபம் ஆகிய திருப்பணி கள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவு பெற்றுவரும் சகல திருப் பணிகளுடன் மூலஸ்தானத் திருப்பணி யும் நிறைவுபெற வேண்டுமென்ற திரு மதி இரத்தின ஐயர் அவர்களின் வேண் டுகோளின் பிரகாரம் சிவநெறிக் காவலர் திரு. சி. முத்துக்குமாரு அவர்களின் பெரு முயற்சியினால் அம்பிகையின் அருளை முன் னிட்டு பஞ்சாயத்துச் சபையார் மகாகும் பாபிஷேகம் செய்யத் தீர்மானித்து எல் லாத் திருப்பணிகளையும் பூர்த்தி செய்து 57 குண்டங்களோடு கூடிய மகா கும்பா பிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பிர திஷ்டாபூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பர மேஸ்வரக் குருக்கள் தலைமையில் பல குரு மார்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

ராஜ கோபுரத் திருப்பணியை அம ரர் நா. தங்கவேலு ஆசாரியும் சித்திரத் தேர்த் திருப்பணியை சிற்பக்கலாமணி திரு. ஆ. ஜீவரட்னமும் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் சுண்ணாம் புக் கட்டடமாக இருந்தபோது பழைய மரங்களை மாற்றிப் புதிய மரங்கள் போட்ட காலத்தில் அப்போது இருந்த நிர்வாகிகள் ஊர்மக்களிடம் பனை மரம் கேட்டுச் சென்றார்கள். வடக்கு வீதியில் இருக்கும் திருக்கேணிக்கு வடக்குப் பக்கத் தில் குடியிருந்த அத்தனாசி என்னும் பெ யருடைய பெண்ணிடம், கோவில் திருப் பணிக்கு மரம் கேட்டார்கள்.

அவர் கொடுக்க மறுக்கவே சென்ற வர்கள் கவலையுடன் திரும்பிவிட்டார்கள். அன்று இரவு அத்தனாசியின் பனைவளவுக் குள் மாத்திரம் பெரும் சுளியோடு கூடிய சூறுவளிக் காற்று வீசி பனைமரங்கள் யா வும் சரிந்து விட்டன. அவருடைய குடி சையும் விழுந்து சின்னாபின்னமாயிற்று.

தன் உயிருக்கும் ஆபத்து வந்து விட்டதே என்று பயந்து கொண்டு அவர் ''தாயே இந்தப் பனைமரங்கள் முழுவ தையும் உன்திருப்பணிக்கேதந்துவிடுவேன் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டினார். புயலும் ஓய்ந்தது மக்கள் வந்து பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். மற்ற இடங்களில் நடவாத அற்புத நிகழ்ச்சி இங்கு மாத்திரம் நடந்த கார ணத்தை மக்கள் கேட்டு அறிந்து, அன்று தொடக்கம் கண்ணகை அம்பாள்மீது என்றுமில்லாத பயபக்தி கொண்டார்கள்

அத்தனாசி அடுத்த நாட் காலையில் கோயிலுக்கு மரம் கேட்ட நிர்வாகிகளிடம் சென்று நடந்ததைக் கவலையோடு கூறி விழுந்த பனைமரங்கள் முழுவதையும் கோ வில் திருப்பணிக்கே எடுத்துக் கொள்ளும் படி வேண்டினார். அன்றுமுதல் எவரும் கண்ணகித் தெய்வத்திற்கு '' இல்லை '' என்று சொல்லாமல் தங்களால் இயன்ற வற்றை உதவிப் பயபக்தியுடன் வழிபட்டு வந்தார்கள்.

அம்பாளின் திருவிழாக் காலங்களில் வருடாவருடம் அம்பாளுக்குத் தேவை யான கடல்படு திரவியங்களான செல் வங்களும் திருவாடு தண்டுகள், பலகை கள், மரங்கள், தேர்வடங்கள் மற்றும் அநேகமான பொருட்கள் கடல் அலைக ளால் அம்பாளின் கடற்கரையில் கொண் டுவந்து சேர்க்கப்படுவது அதி அற்புத நிகழ்ச்சிகளாகும்.

புதிய சித்திரத் தேரினை உருவாக்கிய

# திரு. ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார்

அவர்களுக்கு

ஆலயத்தினர்

## "சிற்பராஜ சிகாமணி"

என்னும் பட்டமளித்து வாழ்த்தி வழங்கிய

# பாராட்டுப் பத்திரம்

அற்புதச் சிற்பத் தேர்கள் அமைப்பதில் தன்னேரில்லா
நற்றவச் சிற்பி யென்றே நானிலம் போற்று கின்ற
விற்பனன் ஜீவரட்ணம் வியன்கலைத் தம்பிமார்கள்
பொற்புறு கைவண்ணத்தில் புரிந்த விந்தைகளைக் கண்டு.

பட்டங்கள் அநேகம் சூட்டிப் பதக்கங்கள் பலவும் ஈந்து
பட்டுப்பீ தாம்பரங்கள் பற்பல போர்த்தி மேலும்
மட்டிலாப் புகழ்மணக்கும் மாண்புறு கவிப்பூமாலை
இட்டனர் ஒண்ணிலாதோர் எவையு மீடாகாவண்ணம்.

இகபர சுகங்கள் நல்கும் இராஜரா ஜேஸ்வரி யம்மைக்கு
அகமிக மகிழ்ந்தே யன்பால் ஆக்கிய ரதத்தின் மாண்பால்
திகழுறு "சிற்பராஜ சிகாமணி" என்றுார் போற்றப்
புகழுறு ஜீவரட்ணம் பொலிக பல்லாண்டு காலம்.

காசினியில் பேசரிய வாசிவாகனந்தரு கந்தசாமியும்
தேசுதிகழ் கொத்துவேலைக்குரியன் துரைராச வித்தகத் தம்பியோடு
வீசுபுகழ் விக்கிரக வேலைசிவ லிங்கமும் விந்தைமிகு சுற்றத்தோரும்
பூசாந்தர முகபத்திரத் தேரொன்று படைத்த பண்பால்.

ஆறுமுகம் சிற்பாலயக்கலைஞர் ஆக்கிய தேரதன்பால் அம்மை
வீறுமிகும் அருளலைகள் வீசிவருதிருக் கோலங்கண்டேயுய்ந்தோம்
கூறரியராஜராஜேஸ்வரியின் அருளிலே குலவியென்றும்
மாறிலாப் பேரின்பநற்பதம் பெற்றுநீ வாழிவாழி.

இங்ஙனம்

பஞ்சாயத்துச் சபையினர்

பரிபாலன சபையினர்

27-7-79

தேர்த் திருப்பணிச் சபையினர்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பணிகொண்ட வேரும் பணிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே.





# கிருஸ்ணு
# கெமிக்கல் இண்டஸ்றீஸ்

உரிமையாளர்: **A.** முத்தையா

342, கிருலகஸ்தெனிய ரேட், பள்ளியவத்தை,
வத்தளை.

# KRISHNA CHEMICAL INDUSTRIES

Manufacturers of

**GOPALA TOOTH POWDER**

342, Kirulagasdeniya Road, Palliyawatte,

WATTALA.

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே


தேரோட்டம் சிறப்புற
வேண்டுகிறோம்.

# இன்ரநெசனல் ஸ்ரோர்ஸ்

30, 32, சென். ஜோன்ஸ் வீதி,
கொழும்பு-11.

தொலைபேசி: 22126

# INTERNATIONAL STORES

30, & 32, St. John's Road,
COLOMBO.

Telephone: 22126

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு)அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே·

சென்னிய(து) உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே.


புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய
தேரோட்ட விழா சிறக்க வேண்டுகிறோம்.

**அம்பிகை குமரன் ஸ்ரோர்ஸ்**

**234, காஸ்வேக்ஸ் வீதி,**
**கொழும்பு-11.**

தொலைபேசி: 34160

# AMBIGAI KUMARAN STORES

**Dealers in Aluminium, Brass, Enamelware**
**& Oilman Goods.**

**234, Gasworks Street,**
**COLOMBO-11.**

Telephone: 34160

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே

தேரோட்டம் சிறக்க — தொண்டர்பணி பெருகுக

# ஜப்ரு பிரஸ் ஸ்ரோர்ஸ்

இல. 238, காஸ் வேக்ஸ் வீதி,
கொழும்பு-11.

♥

# *Jaffna Brass Stores*

No. 238, Gas Works Street,
**Colombo-11**

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னுள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே.

இராஜேஸ்வரி அம்பாளின் தேரோட்டம் சிறக்க வேண்டுகிறேம்

# க. தம்பிராஜா

இல. 75/1 டாம் வீதி,
கொழும்பு.

♣

# K. THAMBIRAJAH

No. 75/1, Dam Street,
**COLOMBO.**

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மேவந்தென் முன்னிற்கவே.

மட்டிலா வரமருளும் அம்பாளின் தேர் பவனி சிறப்புற.

## சித்திரா டிறேட்ஸ்

உரிமை: செ. விஜயசுந்தரம்

# CHITHIRA TRADES

General Merchants & Commission Agents.
All kinds of Aluminium, Brass, Copper, & Leads etc.

**84, New Moor Street,**
**Colombo-12.**

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலத் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனத்தமே.

அண்டினோர்க்கு அபயமளித்திடும் அம்பாளின்
சித்திரத்தேர் பவனிக்கு அர்ப்பணிக்கிறோம்.

## கீதா ரேடிங் கொம்பனி

இல. 4, டாம் வீதி, கொழும்பு-12.

# Geetha Trading Company

IMPORTERS & GENERAL MERCHANTS
Dealers in: Aluminium, Brass, Copperware,
Cotton Rope, Glassware & Enamelwares

**No. 4, Dam Street, COLOMBO-12.**

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணரவிந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே.

## V. N. தம்பிராஜா அன் கோ.

26, புதிய சோனக தெரு,
கொழும்பு-12.

## V. N. Thambirajah & Co.

IMPORTERS, EXPORTERS OF SRI LANKA PRODUCES
AND GENERAL MERCHANTS

**No. 26, New Moor Street,**
**COLOMBO-12.**

Tel. **31122** Cable: **VEENTCO**

---

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து)உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து)என்அம் மேபுவி ஏழையும் பூத்தவளே.

## சிவசண்முகராசா அன் கோ.

45, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11

## SIVASHANMUGARAJAH & CO.

**General Merchants, Commission Agents and Export Suppliers**

— *Dealers in* —

All kinds of Ekel Brooms, Coir Brooms, Coir Yarns, Jute Twine,
Paper Bags, and all other Local Produce.

**45, 4th Cross Street,**
**COLOMBO-11.** *Phone:* **36077**

பூத்தவ ளேபுவ னம்பதி னுன்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே.


அம்பிகையின் அருள் அனைவருக்கும்
கிடைக்க வேண்டுகிறோம்.

# பாலகிருஷ்ண டிறேடர்ஸ்

228, நாலாம் குறுக்குத்தெரு
கொழும்பு-11.

# Balakrishna Traders

228, Fourth Cross Street,
COLOMBO-11.

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவள விற்(கு)அள வான(து) அதிசயமே.


புங்கைநகர் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய
சித்திரத்தேர் பவனிக்கு எமது அன்புக் காணிக்கை.

# வே. சோமசுந்தரம் அன் கோ.

234, கெய்சர் வீதி,
கொழும்பு-11.

# V. Somasuntharam & Co.

GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS
234, Keyzer Street,
COLOMBO-11.

☎ 26462

அதிசய மான வடி(வு)உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும்
சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

★ றோயல் பேக்கிங்பவுடர் ★ றோயல் கஸ்டட் பவுடர்
★ றோயல் கோண் பிளவர் ★ றோயல் பிஸ் மக்ஸ்
★ றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

ஆதமலி பில்டிங்,
22, 1/1 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13.
☎ 26679.

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

சகலரும் அம்பாளின் அருள்பெற யாசிக்கிறோம்

குணசேகரா சன்ஸ் அன் கோ.,
115, ஐந்தாம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11.

GUNASEKARA SONS & CO.,
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS.
115, Fifth Cross Street,
COLOMBO-11.

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்னதிருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ஞசல மங்கலையே.

உலகனைத்தும் இரட்சித்து கருணை மழைபொழியும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்குச்
சமர்ப்பணம்


# லிங்கம் ஸ்ரோர்ஸ்

195, 5-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11

# LINGAM STORES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

DEALERS IN OILMAN GOODS & GROCERIES

**195, 5th Cross Street,**
**COLOMBO-11.**

Telephone: 34697

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
பிடியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து)இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து) ஆண்டு
[கொள்ளே.

**அன்னை அம்பிகையின் அருள் அகிலமெலாம்**
**அருளொளி பரப்பிட வேண்டுகிறேம்.**

# மு. முத்தையாபிள்ளை

**6, கதிரேசன் வீதி,**
**கொழும்பு-13.**

தொலைபேசி: **20575**

# M. MUTHIAHPILLAI

IMPORTERS EXPORTERS & GENERAL MERCHANTS
( COIR DEPT. )

***6, Sri Kathiresan Street,***
**COLOMBO-13.**

**Telephone: 20575**

Head Office:
**105, 107, 5th Cross St., Colombo-11.**
Stores:
**98, Chekku St., Colombo-13.**

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து) அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) [தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

வேண்டும் வரம் தந்தருளும் நாயகியே!
உன்தாள் பரவசமாய் பணிந்திடுவோம்


# நியூ ஐயனூர் ஸ்ரோர்ஸ்

105, 5-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11.

# ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்

5, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

# Sri Iyanar Stores

31, 33, Wolfendhal St.,
COLOMBO-13.

# ஸ்ரீ வேல்முருகன் ஸ்ரோர்ஸ்

103, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13.

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே.

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின் தாள்இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

சித்திரத்தேர் பவனிகாணும் அன்னையின் அருள்
அகிலமெலாம் பாலிக்க வேண்டுகிறோம்.

## விஜயா டிறேடிங் கொம்பனி

69, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

# VIJAYA TRADING CO.

**Forage Stores**

69, Wolfendhal Street,
**Colombo-13**

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

அடியவர்தம் அல்லல் களைந்திடும்
அற்புத நாயகியே! உன்தாள் சரண்.

# சி. சின்னத்துரை அன் பிறதர்ஸ்

**39, கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 2 8 4

கிளை: "கல்கி ஹவுஸ்"

79, மெசென்ஜர் வீதி,

கொழும்பு-12.

தொலைபேசி: 35821 - 32846

சித்தியும் சித்தி தருந்தெய்வமாகித் திகழும்பரா
சத்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து)
[அல்லவென்கை
நன்றே உனக்(கு) இனி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே.


அம்பாளின் அருளில் அகிலம் வாழ்கிறது

# எஸ். கே. செல்லையா

2, டாம் வீதி, கொழும்பு-12.

கிளைகள்:

**கருணு ரேடிங் சென்டர்**
29, டாம் வீதி,
கொழும்பு-12.

**விமல் அன் கோ.**
1, டாம் வீதி,
கொழும்பு-12.

**சிவா அன் கோ.**
6, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-12.

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

ஆசைக்கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல்பட இருந் தேனைநின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.

வாழ்வு வளம் பெற்றிட வரமது தந்திடுவாய்
அகிலாண்டேஸ்வரித் தாயே.


# அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்

66, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7437

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல்என் பாய்அத்தர் சித்தம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே (எல்லாம்
உழைக்கும் பொழு(து)உன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

சித்தம் மகிழச் சித்திரத் தேரேறி
சிங்கார பவனி வரும் சிங்காசனத்
தேவியாம் அம்பாள் அருள்பாலிப்பாராக!


# என். கே. மயில்வாகனம்

## அன் கம்பனி

68, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

22250 டெலிகிராம்: ''வாகனம்கோ''

கிளைகள்:

**தாஸன் டிரேடிங் கம்பனி**
194, காஸ்வேக்ஸ் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 36514

**குமரன் அரிசி ஆலை**
கண்டி வீதி,
வவுனியா.
தொலைபேசி: 216

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றி லேன் அம்புயா (தனத்து) அம்பிகையே.

நம்பினோர் கெடுவதில்லை
இது நான்கு மறைத்தீர்ப்பு
உலக நாயகியை சரண் புகுந்தால்
நாமதிக வரம் பெறலாம்,


# லதா டிரேடிங் கம்பனி

**59, டாம் வீதி, கொழும்பு-12.**

தொலைபேசி: 34907

# LATHA TRADING CO.

**No. 59, DAM STREET,**
**COLOMBO-12.**

PHONE: **34907**

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே.

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே

சர்வதேச சிறுவர் ஆண்டில் சகல சிறார்களுக்கும்
**அன்னை அருள்மிகு கண்ணகை அம்பாள் அருள் கிடைக்க**



## செல்வி ஜனுஷ்யா மாணிக்கவாசகர்

**பிரார்த்திக்கின்றாள்.**

பொ. தம்பிப்பிள்ளை குடும்பத்தினர்
புங்குடுதீவு-12.

◆



# நாதன்ஸ்

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7540

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகள் உண்(டு); அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாள்நுதலே.

ஸ்ரீ விஜயா ஸ்ரோர்ஸ்
65, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

தொலைபேசி: 32751

SRI VIJAYA STORES
65, Wolfendhal Street,
Colombo-13
☎ 32751

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம் அன்றோ? முன்செய் புண்ணியமே.

இந்திரா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
131, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 7250

INDRA HARDWARE STORES
131, Stanley Road,
JAFFNA.
☎ 7250

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே.

சித்திரத்தேர் பவனிவரும் திருக்காட்சி காண
கண்கோடி வேண்டும்

# மகோ ஸ்ரோர்ஸ்

**38, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 8 1 3 2

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.

அம்பாளின் சித்திரத்தேர் பவனி சிறக்க
வேண்டுகிறோம்

# சாந்தி அச்சகம்

**575, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே.

தவளே இவள் எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.

**அம்பாள் அருள் அகிலத்துக்கும்
இடைப்பதாகுக.**


மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை அனுப்பி
எமது வெளியீட்டுப் புத்தகங்களை இனமாகப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7 2 3 3

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி: 36063

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோ
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றன்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே.

அடியவர்தம் அல்லல் களைந்திடும்
அற்புத நாயகியே! உன்தாள் சரண்.

# ஆர். என். கே. ஏஜன்சி

20, 22, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# R. N. K. AGENCY

*General Merchants & Commission Agents*

**20, 22, 4th Cross Street,**
**COLOMBO.**

☎ 22208

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படி யன்றுவிள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ணமடா

# எம். ரி. பொன்னம்பலம்

36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7593

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே

சீரும் சிறப்பும் நல்வாழ்வும் தந்திட
வேண்டுகிறேம்

# சோமா டிரேடிங் கம்பனி

29, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

# அபிராமி அந்தாதி

(விளம்பரங்களுக்குள் தொடர்ச்சியாக வந்த பாடல்களின்தொடர்ச்சி)

49. குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.

50. நாயகி நான்முகி நாராயணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

51. அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார் இந்த வையகத்தே.

52. வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே.

53. சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.

54. இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

55. மின்னு யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னுள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னு(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவ(து) ஒன்றிலையே.

56. ஒன்றய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுலகெங்குமாய்
நின்ருள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றுது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்று லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.

57. ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே.

58. அருணும் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமும் கராம்புயமும்
சரணம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.

59. தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு)அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே.

60. பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே.

61. நாயேனை யும் இங்(கு)ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.

62. தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறிப்பிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே,

63. தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண் டென்று கொண்டாடிய வீணருக்கே.

64. வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்(கு) அன்புபூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

65. ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

66. வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

67. தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

68. பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

69. தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

70. கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

71. அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்(கு) என்குறையே.

72. என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

73. தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும்பொழு(து) எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.

74. நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

75. தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிலர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

76. குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.

77. பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

78. செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.

79. விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு) அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

80. கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

81. அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்து கிலேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) என்றிருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றி லேன்என் கண்நீவைத்த பேரளியே.

82. அளியார் சமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.

83. விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

84. உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

85. பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே.

86. மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

87. மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே.

88. பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம் அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யாள்இடப் பாகம் சிறந்தவளே.

89. சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

90. வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்து புகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே.

91. மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு)ஊரும் பதம்தருமே.

92. பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போனவழியும் செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

93. நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

94. விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே.

95. நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

96. கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

97. ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

98. தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே.

99. குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே.


100. குழையைத் தழுவிய கொன்றையைத் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே.

## நூற் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு)ஒரு தீங்கில்லையே.

உ
சிவமயம்

# வசந்தத் திருநகரில் தேர்த்திருவிழா




## - வை. இராஜேஸ்வரன் -

ஆசிரியர்: "அறிவுப்பொழில்"


இன்று எழில்கொஞ்சும் வசந்தத் திருநகராம் புங்கைமாநகர் தேர்த் திருவிழாவிற்காக விழாக்கோலம் பூண்டுள்ளது. அருள்விளங்கு கண்ணகி அம்மன் என அழைக்கப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் இன்று அடியார்களால் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

அம்பாளின் அருள் பெறவேண்டி ஆண்டாண்டுதோறும் தேர்த்திருவிழாத் தினத்தில் ஆலயமுன்றலில் கூடும் அடியார்கள் தொகையோ அளவிடற்கரியது. கருணைமிகு கண்ணகி அம்மனின் அருள் பெற்று இம்மையில் செம்மையான வாழ்வினைப் பெற்ற அன்பர்கள் பலர் இணைந்து புதிய இரதம் ஒன்றினை உருவாக்கியுள்ளனர். இன்று புதிய இரதத்தில் அருள் விளங்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் பவனிவரும் காட்சியைக் கண்டுகளித்தவர்கள் வாழ்வின் மலர்ச்சியைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

தேர்த்திருவிழா அழித்தலைக் குறித்து நிற்கின்றது. தேரின் உருவத்தை உற்று நோக்கும்பொழுது அது ஆர்த்தெழுந்தெரியும் அக்கினிச் சுவாலையின் தோற்றத்தை ஒத்திருப்பதை யாம் அவதானிக்கலாம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற பஞ்சகிருத்தியங்களில் அழித்தல் செய்ய வருகின்ற காட்சி தேர்த் திருவிழாவாகும். அழித்தல் செய்யவரும் காட்சியென்றால் கருணைமிகு கண்ணகை அம்மன் எம்மை அழிக்க வரும் காட்சி என யாம் தவறாக எண்ணிவிடல் கூடாது.

அல்லல் களைந்து ஆனந்தம் அளிக்கும் கருணைமிகு கண்ணகி அம்பாளுக்கு யாம் மலபந்தத்தில் சிக்குண்டு கிடப்பதைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை. ஆதலால் அம்பாள் எம்மைப் பற்றியுள்ள மலங்களை அழித்து, அழித்தல் தொழிலைச் செய்ய எழில்மிகு இரதத்தில் பவனி வருகின்றாள். எம்மைப் பற்றியுள்ள மும்மலங்களும் அழிந்தால் தான் யாம் முழு மனிதர்களாவோம். அப்பொழுது தான் எமக்கு நிறைந்த வாழ்வு வந்து அமையும்.

தேர்த்திருவிழா பற்றி ஸ்ரீ சாமிவிசுவநாதக்குருக்கள் பின்வருமாறு கூறியதை யாம் இங்கு நோக்கற்பாலதாகும். "சிருஷ்டி, திதி, சங்காரம் என்பன ஆன்மா தனுகரண புவன போகங்களைப் பொருந்துதலையும், அவற்றில் நிலைத்து நிற்றலையும் அதனின்று மாறுதல் அடைதலையும் குறிப்பிடுவதே இரதோற்சவமாகும்.

இரதத்தின் விரிவு சிற்பசாகரத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இறைவன் தேரின் வடிவு இலக்கணத்தைக் கூறியருளுகின்ருர். சூரியர், சந்திரர் சக்கரமாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், சரம் அசரமாகிய பொருட்கள் யாவும் ஒவ்வொரு உறுப்புகளாகவும் அமைக்கப்பட்ட தேரில் அம்பாள் வீற்றிருந்து வையம் ஊர்தி என தமது ஆலயத்தை வலம்வர, அந்த அருள் உலகம் எங்கனும்பெருகும் என்பது உண்மை. நாங்கள் அந்த பேரருள் பொருந்திய இரத வடத்தைத் தொட்டு இழுக்கும் பொழுது எமது மனம் அருணகிரிநாதர் ''பக்தியால் யான் உனைப் பலகாலும்..'' என்று பாடியதுபோல பக்தி என்னும் கயிறுதான் வடமாக அமைவது என்பது ஒவ்வொரு ஆன்மாக்களிடத்தும் பதிய முத்தி நிலையை அடைவது சுலபமாகும்.

தேர், தாமரை மொட்டு வடிவம் உடையது. மேலே தடம் கீழ்நோக்கி விரிந்து வந்து, நடுப்பக்கம் அகன்று அதற்கும் அடிப்பகுதியில் கூம்பிச்செல்வதை யாம் அவதானிக்கலாம். இதயத்திலே சிதாகாசம் ஒன்று இருப்பதை யாவரும் அறிவார்கள். தேரில் இறைவன் வீற்றிருக்கும் இடமே சிதாகாசமாய் எண்ணப்படுகின்றது.

நான்கு சக்கரங்களையும் தேர்த்தட்டினையும் மேலே அமைந்த விதான அடுக்குகளையும் அவற்றின் உச்சியில் உள்ள கலசத்தையும் அதற்கு மேல் விண்முட்டப் பறக்கும் கொடியினையும் பார்த்தால் உயிர் இறைவனை அடையச் செய்யும் வழியின் அடிப்படையையும் அதற்கான உபாய நெறியின் அமைப்பையும் உய்த்துணரலாம். தேரும் தேரோட்டமும் இறைவனேடு உயிர் இரண்டறக்கலக்கும் பேரின்ப வாழ்விற்கு வழிகாட்டியாக அமைந்து இருக்கின்றன.

அருள்மிகு கண்ணகி அம்பாள் புதுத் தேரில் பவனிவரும் இத்தினம் புங்குடுதீவு மக்களின் வாழ்வில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்திய பொன்னுள் ஆகும். யாம் எம்மைப் பற்றியுள்ள பற்றுக்களை நீக்கி அம்பாளின் அருள்பெறப் பற்றற்ற வினைகளைச் செய்து அவள்பதம் அடைவோமாக.

## கோயிலில் ஏன் தேங்காய் உடைத்து அருச்சனை செய்கிறேம்?

குடுமி, கண்கள் ஆகியவற்றைத் தேங்காய் உடையதாக இருப்பதால் அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான தலையை அது குறிக்கிறது. தேங்காயைச் சுற்றியுள்ள ஓடு அறிவைச் சூழ்ந்துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகிறது. ஆணவ மலத்தை நீக்கி அறிவைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என இறைவனைக் கேட்பதே தேங்காய் உடைப்பதன் கருத்தாகும். நம் அறிவிலேயே இறைவனை அடைந்துவிடலாம் எனக் கருதுபவர்களும் உண்டு. ஆனல் அது ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டிருக்கும்போது இறைவனை அறியமுடியாது. சிதறத் தேங்காய் உடைப்பது போல் உள்ளம் நெக்குருகி வழிபட்டால் இறைவனைக் காணலாம்.

உ

அம்பிகை துணை

# நன்றியுரை

அழகும் அருளும் பொலிய கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாளுக்கு அமைக்கப்பட்ட அன்பினாலான அழகிய புதிய சித்திரத்தேர், தேர்முட்டி ஆகியவை நிறைவுபெற்றதையொட்டி அம்பிகை அடியார்கள் பலருக்கு நன்றி கூறும் கடமை தேர்த் திருப்பணிக் குழுவினருக்கு உண்டு. முதலாவதாக, இன்று வானளாவ உயர்ந்து அழகுற நிற்கும் தேர்முட்டியை தனது குடும்பத்தார் உபயமாக செய்துதந்துள்ள பெருமை கொழும்பு பிரபல வர்த்தகர் திரு. க. தியாகராசா அவர்களையே சாரும். இந்த பெரிய கைங்கரியம் நடந்தேறாதிருந்தால் இத்தேர்த் திருப் பணி இன்னும் ஒரு சில வருஷங்கள் பின்தங்கவேண்டி இருந்திருக்கும். அம்பிகையின் மேற்கொண்ட அசையாத பக்தியால், ''ஒன்றே செய் அதுவும் நன்றே செய்'' என் னும் முதுமொழிக்கொப்ப தாய் தந்தையார் மேற்கொண்ட அழியாத பாசத்தினால் அவர்களுக்குத் தான் செய்யும் காணிக்கையாக இப்பெருந் திருப்பணியை அவர்கள் நினைவாக செய்துகொடுத்தமைக்காக அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல இறைவியின் திருவருள் கடாட்சம் கிடைக்கப்பெற வேண்டும் என வாழ்த்தி, எமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் ஏறக்குறைய இரண்டு லட்சம் ரூபா செலவில் இச் சித்திரத்தேரைச் செய்ய பணத்தை அன்பளிப்புச் செய்த அடியார்கள் அனைவரும் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

தேர் அமைப்புக்கு வேண்டிய அச்சு, சில்லு, நட்டுப்பேர்வரி, அன்னம், பூதங் கள், அட்டதிக்குப்பாலகர்கள், குதிரைக்கட்டை, சிங்கக்கட்டை, பத்மாசனம், தேவா சனம், சிம்மாசனம், குதிரைகள், சாரதி, மணிகள், வாகைமாலை இப்படியாக ஒவ் வொரு பகுதிகளையும் நாங்கள் சென்று கேட்டவிடத்து எவ்வளவோ இக்கட்டான நேரத்திலும் மனமுவந்து தங்கள் செலவில் செய்துதருவதாக முன்வந்து எங்களுக்கு இப்பேருதவியைச் செய்த கொழும்புவாழ் வர்த்தகப் பெருந்தகைகளுக்கு உளமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்திருப்பணியை குறிப்பிட்ட காலஎல்லைக்குள் செய்து முடிக்க வேண்டும். ஆகவே குறைந்தது ஆயிரமாவது தரவேண்டும் என்றபோது ஆயிரமாயிரமாக வழங் கிய அம்பிகை அடியார்களுக்கும் எமது நன்றியும் பாராட்டும். மேலும் தம்மால் இயன்ற அளவு பண உதவிபுரிந்து எம்மை ஊக்குவித்தவர்களுக்கும் எமது நன்றியும் பாராட்டும்.

சித்திரத்தேர்த் திருப்பணியை குறுகியகால எல்லைக்குள் வெகு சிறப்பாக, தாம் இவ்வளவு காலமும் செய்ததிலும் பார்க்க, சிறந்த கைவண்ணத்தில் அம்பாளுக்கு அழகு பொருந்தியதாக செய்ய வேண்டும் என்ற ஒரு பெருநோக்குடன் அம்பிகையின் திருவருள் பக்திக்கு ஆளாகியும், யாழ் பிரபல வர்த்தகர் திருவாளர் சி. முத்துக்குமாரு அவர்களது குடும்பத்தில் ஒருவர்போல் திகழ்ந்து, அவர்கள் அன்பிற்குக் கட்டுப்பட்ட படியாலும் இப்பெரும் திருப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றித்தந்த ஸ்தபதியார் ''சிற்பரதவித்தகன்'' ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்களுக்கும் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயம் சிற்பச்செல்வர்களுக்கும் எல்லாம்வல்ல தேவியின் திருவருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் என்று வாழ்த்தி எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அம்பிகைக்கு புதிய சித்திரத்தேர் செய்ய வேண்டும் என்ற பேரவாவினாலே உந்தப்பட்டு அம்பிகையை புதிய சித்திரத்தேரிலே அமரவைத்து அந்த அழகைப்பார்த்து ஆனந்தமடைய வேண்டும் என்ற துரித எண்ணத்தினாலே இரவுபகல் என்று பாராது தமது தொழிலைப்பற்றியும் சிந்திக்காது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அம்பிகைக்குக் காணிக்கையாகச் செலுத்தி புதிய சித்திரத் தேரை உருவாக்க அல்லும் பகலும் உழைத்தவர்கள் திருவாளர் சி. முத்துக்குமாரு அவர்களும் மக்கள் கனகசபாபதியும் கிருபானந்தனும். அவர்களுக்கு அம்பிகை அடியார்கள் அனைவரும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். இவர்களுக்கும் தேவியின் திருவருட் கடாட்சம் கிடைக்கவேண்டும் என்று வாழ்த்தி எமது நன்றியையும் பாராட்டுகளையும் சமர்ப்பிக்கின்றோம்.

சித்திரத்தேர் சிறப்பாக அமையவும் மலர் சிறக்கவும் பொருள் உதவி புரிந்து எம்மை ஊக்குவித்த வர்த்தகப் பெருந்தகைகளுக்கும் விடயதானங்கள் தந்துதவிய பெரியார்களுக்கும் எமது நன்றியும் பாராட்டும் உரித்தாகுக.

கண்ணகி கலாமன்ற இளைஞர்கள் மகோற்சவ காலங்களிலும், விசேட தினங்களிலும் தொண்டாற்றி இவ்வாலய வளர்ச்சிக்கு இயன்ற தொண்டுகள் புரிந்து, தூய்மை, அழகு, ஒழுங்கு ஆகியன நிலவ தம்மாலான சிரமதான பணிபுரிந்து வருவது பெரும் பாராட்டுக்குரியது. இவர்களுக்கும் எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மலரை இரவுபகல் என்று பாராது, குறுகியகால எல்லைக்குள் அதாவது ஒருகிழமைக்குள் அழகுபொலிய அச்சிட்டுத்தந்த பெருமை யாழ். சாந்தி அச்சகத்தாருக்கே உரியது. அவர்களுக்கும் எமது நன்றியும் பாராட்டும் உரித்தாகுக.

இம் மலர் வெளியீட்டு விழாவிலே முதற்பிரதியையும் கௌரவ பிரதிகளையும் பெற்று நல்லாதரவு நல்கும் பெருமக்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. மேலும் மலர் பூரணமும் பொலிவும்பெற்று வெளிவருவதற்கு துணைபுரிந்த எல்லாம்வல்ல அன்னை இராஜராஜேஸ்வரிக்கு எமது வணக்கத்தைச்செலுத்தி அமைகிறோம்.

குறிப்பு: பொருள் உதவி புரிந்தோரின் பெயர்களும், அன்பளிப்பு செய்தோரின் விபரங்களும் இத்திருப்பணி வரவு — செலவு அறிக்கையும் பின்னர் அறியத்தரப்படும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

**த. கிருஷ்ணசாமி**

தேர்த் திருப்பணிக் குழுவினர் சார்பில்

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.